பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 26 வியாழக்கிழமை 11.03.2021 கதிர் 126

**இனி இது ரகசியம் அல்ல!**

வெளிநாட்டிலிருந்து கூட்டமைப்பின் – விசேடமாக இலங்கைத் தமிழரசின் – ஆதரவாளர் ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். நம்மூர்த் தொடர்புடையவர். தமிழரசின் தீவிர ஆதரவாளர் எனினும் சம்பந்தன் மீது ஏனோ அதிகம் காழ்ப்புணர்ச்சி பக்கம்02

# பொறுப்புக்கூறலில் அரசின் தோல்வியையே கிறிஸ்தவ சமூகமும் உறுதிப்படுத்துகின்றது!




## சர்வதேச விசாரணைக் கோரிக்கை அதனால்தான் என்கிறார் சுமந்திரன்

பொறுப்புக்கூறலை நிலைநாட்டும் தனது கடப்பாட்டில் இலங்கை அரசு முழுத் தோல்வி கண்டுவிட்டது. பதினொரு ஆண்டுகளாக நாம் கேட்டுவரும் சர்வதேச விசாரணையை இரண்டு ஆண்டுகளில் கிறிஸ்தவ சமூகம் கேட்கும் நிலைமை அதனால்தான் உருவாகியுள்ளது என்று நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன். 2

## இராணுவத்தினர் ஒருபோதும் போர்க்குற்றம் செய்யவில்லை

### தளபதி சவேந்திர சில்வா கூறுகின்றார்



இலங்கையில் போர்க் குற்றங்களில் இராணுவத்தினர் ஒருபோதும் ஈடுபட்டவர்கள் அல்ல. இராணுவத் தளபதி என்ற ரீதியில் எனது மனச்சாட்சியின் பிரகாரம் இதை 11

## போர்க்குற்றம் செய்யவில்லையெனில் ஏன் விசாரணைக்கு அஞ்சுகின்றீர்கள்?

### இராணுவத் தளபதியிடம் சம்பந்தன் கேள்விக்கணை

இலங்கை இராணுவத்தினர் போர்க்குற்றங்களை இழைக்கவில்லையெனில் அவர்களும், அரசதரப்பினரும் அது தொடர்பான விசாரணைக்கு ஏன் அஞ்சுகின்றீர்கள்?

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

'இலங்கையில் போர்க்குற்றங்களில் இராணுவத்தினர் ஒருபோதும் ஈடுபட்டவர் அல்லர். இராணுவத் தளபதி என்ற ரீதியில் எனது மனச்சாட்சியின் பிரகாரம் இதை சர்வதேசத்துக்குக் கூறிவைக்க விரும்புகின்றேன்' என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்த கருத்து தொடர்பில் ஊடகங்களிடம் பதிலளிக்கும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் 11



## 'ஈஸ்டர் தாக்குதல்' அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதா?

### ஜனாதிபதியின் புதிய ஆணைக்குழுதான் இறுதி முடிவெடுக்கும் என்கிறார் கெஹலிய



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் எவற்றை நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் ஜனாதிபதியின் புதிய ஆணைக்குழுதான் இறுதி முடிவெடுக்கும். 11

## பளை அரச காணிகளை தென்னிலங்கையருக்கு ஏக்கர் ரூ.5 லட்சம் வீதம் லஞ்சத்துக்கு விற்பனை?

### அதற்காகவே ஆவணக் கடத்தல் என்கிறார் சிறிதரன் எம்.பி.

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.11

பளையில் உள்ள காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் நிலங்களை தெற்கிலே விற்பனை செய்யும் பணியை இலகுபடுத்துவதற்காகவா யாழ்ப்பாண அலுவலக ஆவணங்கள் அனைத்தும் இரகசியமான முறையில் அநுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கேள்வி எழுப்புகின்றார்.

காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவிற்கு பளையில் 2



## 13ஆவது நாளாகத் தொடரும் அம்பிகையின் உண்ணாவிரதம்




சிறு பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் உண்மைக்கும் நீதிக்குமான போராட்டத்தைக் கையில் எடுத்துள்ளனர் என்று இலண்டனில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அம்பிகை செல்வகுமார் தெரிவித்துள்ளார். 11

## ரூ.30 ஆயிரம் கோடி சீனா கடன் உதவி

இலங்கையின் தற்போதைய கறன்சி மாற்றுகை நெருக்கடியைச் சமாளிப்பதற்காக இலங்கைக்கு 1000 கோடி 11

NEW SCIENCE HALL
2023 A/L
கணித, உயிரியல் பிரிவு
நேரடி, நிகழ்நிலை வகுப்புக்கள்
Tamil & English Medium
வகுப்புக்கள் யாவும் நடைபெறவுள்ளன.
ஆரம்பம் :- 14.03.2021
நேரம் :- 9.30 am
Kannathiddy Road, Jaffna.

## ஆனந்தசங்கரிக்கு எதிராக உள் வீட்டுப்புரட்சி தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் வெடித்தது!

### பத்து மூத்த உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து போர்க்கொடி



தமிழர் விடுதலைக் கூட்டணியில் அதன் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரிக்கு எதிராக வலிமையான உள்கட்சிக் குழு ஒன்று 'உள்கட்சிப் புரட்சி'யில் குதித்திருக்கின்றது.

அடுத்த 14 நாள்களில் – அதாவது வரும் 17 ஆம் திகதிக்குள் – கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படாவிட்டால் நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அக்குழு சங்கரியை எச்சரித்துள்ளது.

'எமது கட்சியின் பொதுச் சபை கூட்டத்தை 11

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டவர். துடிப்பான அடுத்த தலைமுறை அரசியல்வாதிகைள திருகோணமலையில் உருவாக்காமல் தாம் மட்டும் தலைவராக இருந்து ஆண்டனுபவித்து விட்டுச் செல்கின்றார் சம்பந்தன் என்று எப்போதும் சீறுவார்.

*"பார்த்தீர்களா, படித்திருக்கிறார் சம்பந்தன் சரியான பாடம்!"* – என்ற முழக்கத்தோடு நேற்று அழைப்பு எடுத்தார். எனக்கு அடியும் புரியவில்லை, தலையும் புரியவில்லை.

என்ன என்று விடுத்துக் கேட்டேன். ஆரம்பத்தில் இருந்து தொடங்கினார்.

*"கடந்த பொதுத் தேர்தல் முடிந்த பிறகு கூட்டமைப்புக்குள் என்ன நடந்தது என்று நினைவிருக்கின்றதா?"*– என்று கேட்டார்.

எனது நினைவாற்றலை செக்' பண்ணுகின்றாரோ என்று எனக்கு எரிச்சல் வந்தது.

*"எதைச் சொல்லுகின்றீர்கள்?"*– என்று கேட்டேன்.

*"கூட்டமைப்பு எம்.பிக்களின் புதிய நாடாளுமன்றக் குழு பத்து உறுப்பினர்களுடன் கூடியது. அதில் ஆறு பேர் தமிழரசுக் கட்சியினர். மூவர் ரெலோவினர். புளொட் சார்பில் சித்தார்த்தன். கூட்டமைப்புப் பேச்சாளர் தெரிவு வந்ததும் 'தம்பி செல்வம்' என்று விழுந்தடித்துக் கொண்டு செல்வத்தின் பெயரைப் பிரேரித்தவர் கூட்டத்துக்குத் தலைமை வகித்த சம்பந்தன் தான்"* – என்றார் அவர்.

*"ஆமாம். உண்மைதான். அப்படித்தான் நடந்தது."* – என்று உறுதிப்படுத்தினேன் நான்.

*"தமிழரசுக் கட்சியின் மற்றைய ஐவரும் – சுமந்திரன், சிறிதரன், சாணக்கியன், சாள்ஸ் நிமலநாதன், கலையரசன் ஆகியோர் – அதற்கு இணங்கவேயில்லை. முரண்டு பிடித்தனர். ஒரேயடியாக இறுக்கமாக நின்றனர். அதனால் அந்தத் தெரிவு உறுதிப்படுத்தப்படவில்லை. விடயம் அப்படியே இழுபடுகின்றது. சுமந்திரன் பேச்சாளர் பதவியில் தொடர்கின்றார்"*– என்றார் அவர்.

*"ஆமாம். உண்மைதான். அது எதற்கு இப்போது?"* – என்று கேட்டேன் நான்.

*"விடயம் இருக்கின்றது. ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக மேற்கு நாடுகள் முன்வைத்துள்ள பிரேரணையை ஆதரிக்குமாறு கோரி உறுப்பு நாடுகளுக்கு கூட்டமைப்புத் தலைவர் என்ற வகையில் சம்பந்தன் ஒரு பகிரங்கக் கோரிக்கைக் கடிதம் ஒன்று அனுப்பியவர் அல்லவா? அதில் சம்பந்தனுடன் கூட்டமைப்புப் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் ஒப்பமிட்டுள்ளனர் என்ற சாரப்படத்தான் அது பகிரங்கப்படுத்தப்பட்டது. அது குறித்து சம்பந்தன். செல்வத்துடன் பேசியிருந்தாராம். நகலும் செல்வத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது. தனது கருத்தை சித்தர், செல்வம், மாவை எல்லோரும் ஒப்புக் கொள்வர் என்ற நம்பிக்கை அடிப்படையில்தான் அதனை சம்பந்தன் பகிரங்கப்படுத்தினார். ஆனால் அந்த அறிக்கைக்கும் – கோரிக்கைக்கும் – தங்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை, நாம் அதில் சம்பந்தப்பட வில்லை என்று செல்வம் தானும் அறிவித்தமை மட்டுமன்றி, தமது கட்சிப் பேச்சாளர் சுரேந்திரன் மூலம் ஓர் அறிக்கையையும் வெளியிட வைத்து சம்பந்தனை நோண்டியாக்கியிருக்கின்றார். இப்படித் தம்முடன் நம்பகமாக – நம்பிக்கைக்குரியவராக –செயற்பட முடியாதவரைத்தான் தாம் தலைமை வகிக்கும் கூட்டமைப்புக்குத் தமது சார்பான பேச்சாளராகக் கொண்டு வரும் முட்டாள்தனமான முயற்சியைத்தான் தாம் எடுத்திருக்கின்றார் என்பது இப்போதுதன்னும் சம்பந்தனுக்கு புரிந்திருக்குமோ – அவர் மூளைக்கு உறைத்திருக்குமோ –தெரியாது. ஏற்கனவே தமது நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடக்க முடியாத நீதியரசர் விக்னேஸ்வரனை வடக்கு முதலமைச்சராக வலிந்து கொண்டுவந்து, கூட்டமைப்பையே ஒரு குழப்பம் குழப்பி, பெரும் பின்னடைவுக்குள் மாட்டிய பிரகிருதி சம்பந்தன் தான். இப்போதும் இன்னொரு கோடரிக் காம்பை முன்னுக்குக் கொண்டு வர முயன்றிருக்கின்றார். இதுவும் அவருக்கு விளங்குமோ என்னவோ...?"* – என்று தமது சம்பந்தன் விரோத புராணத்தைப் பாட ஆரம்பித்தார்.

நான் சம்பந்தனைப் பாதுகாக்கும் வகையில் சில விடயங்களைக் கூற முற்பட்டேன். அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

*"உறவு கடந்து, இன நலம் கருதிச் சிந்தியுங்கள்!"* – என்று கூறி பட்டென்று கட் பண்ணினார் தொலைபேசித் தொடர்பை அவர்.

தமிழரசுக் கட்சியினருக்கு அவர்களின் ஆதரவாளர் ஒருவரின் இந்த ஆதங்கம் சமர்ப்பணம்.

★ ★ ★

ரஞ்சன் ராமநாயக்காவின் எம்.பி. பதவி பறிபோகக் கூடிய ஆபத்து இருப்பது குறித்து இப்பத்தியில் நேற்றுப் பிரஸ்தாபித்திருந்தேன்.

சிறையில் இருக்கும் அவர் அதனால் நாடாளுமன்றுக்கு வரக்கூடிய நிலையில் இல்லை. அவரை நாடாளுமன்றுக்குக் கூட்டிவரும் உத்தரவை சிறை அதிகாரிகளுக்கு விடுக்கும்படி அல்லது நாடாளுமன்றுக்கு பிரசன்னமாகாமல் இருக்கும் வகையில் அவருக்கு விடுமுறை வழங்கும் பிரேரணையை சபையில் அனுமதிக்கும்படி சபாநாயரிடம் ரஞ்சனின் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று நாடாளுமன்றத்தில் கோரியது. எதிர்பார்க்கப்பட்டபடி அந்தக் கோரிக்கையை ஏற்க சபாநாயகர் மறுத்துவிட்டார்.

எதிர்வரும் ஏப்ரல் 6ஆம் திகதிக்கு முன்னர் அவர் சபைக்கு வராவிட்டால், தொடர்ந்து சபைக்கு மூன்று மாதங்களுக்கு மேல் சமுகம் தராதமை காரணமாக அவர் பதவியை இழக்கும் ஆபத்து உள்ளது.

அதற்கிடையில், அவரது எம்.பி. பதவியை, மேற்படி அவருக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பைக் காரணம் காட்டி பறித்து விடக்கூடாது என உத்தரவிடக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு வரும் 16ஆம் திகதி நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

சபாநாயகர் எப்படிச் செயற்பட வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட முடியாது எனினும் –

ரஞ்சன் ராமநாயக்காவின் எம்.பி. பதவியை வழக்கு விசாரணை முடியும் வரை பறிக்கக்கூடாது எனத் தான் ஏற்கனவே விடுத்திருக்கும் இடைக்காலத் தடை உத்தரவின் தாற்பரியத்தை – விளக்கத்தை – சபாநாயகருக்கு மேலும் விளக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் அன்று பணிப்பு வழங்குமானால், ரஞ்சன் ராமநாயக்கா சிறையில் இருந்து நாடாளுமன்ற அமர்வுக்கு வந்து போகவும், அவர் பதவியில் நீடிக்கவும் வாய்ப்புண்டு.

ரஞ்சனுக்கு எம்.பி. பதவியில் தொடர்வதற்கான கடைசி வாய்ப்பு இது ஒன்றுதான்...!

– மின்னல் –

---

## பொறுப்புக்கூறலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இறுதி யுத்தத்தில் எமது மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இன அழிப்புக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும், பொறுப்புக்கூறலை நிறைவேற்ற வேண்டும் எனப் பதினொரு ஆண்டுகளாக நாம் வலியுறுத்திக் கொண்டு வருகின்றோம். அதனை சர்வதேச விசாரணை மூலம் மட்டுமே பெற முடியும் என்ற கருத்து நிலையில் நாம் உள்ளோம். அதனையே இரண்டு ஆண்டுகளில் கிறிஸ்தவ சமூகம் இன்று கேட்கும் நிலைமை உருவாகியுள்ளது.

உள்ளக விசாரணைப் பொறிமுறையில் நம்பிக்கை இல்லை என்பது இன்று நிரூபணமாகிவிட்டது. பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவதில் நாட்டின் அரசு (இராச்சியம்) தோற்றுவிட்டது. – எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் சபையில் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஆளும் கட்சி கொண்டு வந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மிக மோசமான தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதில் கிறிஸ்தவ தேவாலயங்கள் தெளிவாக இலக்கு வைக்கப்பட்டன. பல நூறு பேர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர். சிறுவர்கள் பலர் கொல்லப்பட்டமையுடன் பாதிக்கப்பட்டனர்.

எவ்வாறு இருப்பினும் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்குநீதியைபெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கான கடப்பாடு அரசாங்கத்திற்கு உள்ளது. பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியை பெற்றுக்கொடுக்கும் – குற்றவாளிகளுக்குத் தண்டனையைப் பெற்றுக்கொடுக்கும் – கடப்பாடு அரசாங்கத்திற்கு உள்ளது. ஆனால் அரசாங்கம் இந்த விடயத்தில் நீதியை வழங்குவதில் தோல்வியடைந்துள்ளது என்றே கூற வேண்டும்.

இந்த தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் எனப் பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை கேள்வி எழுப்புகின்றார். ஆனால் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சஹ்ரானே பிரதான சூத்திரதாரி என சபையில் கூறிகின்றார். அவ்வாறு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் பிரதான சூத்திரதாரி யார் என்பது தெரிவிக்கப்படவில்லை. முதலில் நாடாளுமன்ற தெரிவுக்குழு அறிக்கையை வாசிக்க வேண்டும். குற்றவாளிகளை கண்டறியும் வழிமுறையை நாடாளுமன்றத் தெரிவுக்குழு தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதல் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அதில் பல விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்த தாக்குதலை திட்டமிட்டவர் யார், பின்னால் இருந்து இயங்கியவர் யார், யாருடைய நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இந்தத் தாக்குதல் இடம்பெற்றது என்பவை கண்டறியப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த தாக்குதலினால் யாருக்கு பயன் கிடைக்கும் என்பதும் ஒரு கேள்வியாகும். அதேபோல் யார் பயனடைந்தனர் என்ற கேள்வியும் கேட்க வேண்டியுள்ளது. ஆனால் இதற்கு பதில் எம் அனைவருக்கும் தெரியும்.

அதேபோல் இரண்டு ஆண்டுகளாக இந்தத் தாக்குதல் குறித்து ஆராயப்பட்டு வருகின்ற போதிலும் இன்னமும் இந்த தாக்குதலின் பின்னாலுள்ள பிரதான சூத்திரதாரி கண்டறியப்படவில்லை. அப்படியென்றால் இது மறைக்கப்படுகின்றது.

இவ்வாறான தாக்குதல் நடத்தப்படும் என வெளிப்படையாக அறிவிக்கப்பட்டும், தாக்குதல் நடத்த மூன்று வாரங்களுக்கு முன்னர் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டும், இறுதி நேரத்தில் கூட தகவல்கள் கிடைத்தும், அதனைத் தடுக்க முடியாமல் போயுள்ளது. இந்த தகவல்கள் அனைத்துமே தாக்குதலுக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்டவையாகும். நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையிலும், ஜனாதிபதி ஆணைக்குழுவிழும் விசாரிக்கப்பட்டும், இப்போது வரையில் பிரதான சூத்திரதாரி யார் என்பது தெரியாது என அரசாங்கம் கூறுகின்றது என்றால், இதன் பின் னணியில் எதோ தவறு இடம்பெறுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும். அதுவே பொறுப்பான அரசின் (இராச்சியத்தின்) கடமையாகும். எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் குற்றவாளிகளைக் கண்டறிய வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உள்ளது, அவ்வாறு இருக்கையில் இவ்வாறான மிக முக்கியமான விடயமொன்று கைவிடப்படுகின்றது என்றால் ஓர் அரசாக (இராச்சியமாக) நாம் பலவீனமடைந்துள்ளோம்.

இந்த நாட்டில் எமக்கு எதிராக இடம் பெற்ற இன அழிப்பில் நியாயத்தை கேட்டு நிற்கின்ற வேளையில், சர்வதேச விசாரணையை நடத்தக்கோரி நிற்கின்ற நிலையில், சர்வதேச விசாரணை அவசியமில்லை, உள்ளக விசாரணைகளில் தீர்வு காண்போம் என கூறியவர்கள் இப்போது இந்த விடயத்தில் சர்வதேச விசாரணை வேண்டும் என கேட்கின்றனர். ஏன் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது? ஏனென்றால் பொறுப்புக்கூறலை நிறைவேற்றவும், தமது மக்களுக்கான நியாயத்தை, நீதியை நிலைநாட்டவும் அரசாக (இராச்சியமாக) இலங்கை தோற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர் இப்போது இடம்பெற்றுக்கொண்டுள்ளது. எமது மக்களுக்கு பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்பட வேண்டும் என நாம் தொடர்ச்சியாக பதினொரு ஆண்டுகள் கேட்டுக்கொண்டு வருகிறோம். 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆரம்பித்த எமது கோரிக்கை இன்றுவரை தொடர்கின்றது. இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற போர் குற்றங்களை ஆராயவும் பொறுப்புக்கூறவும் வலியுறுத்துகின்றோம்.

ஆனால் இன்றுவரை எமது குரலுக்கு நீதி கிடைக்கவில்லை. எனினும் கிறிஸ்தவ மக்களின் நியாயத்தை பெற்றுக்கொள்ள உள்ளக விசாரணைகளில் முடியாது போயுள்ள இரண்டு ஆண்டுகளில் சர்வதேச விசாரணையை அவர்கள் கேட்டுள்ளனர். நாம் 11 ஆண்டுகளாகப் பார்த்துக் காத்திருக்கின்றோம். அப்படி இருக்கையில் எமது கோரிக்கை நியாயமில்லை எனக் கூற எவருக்கும் இப்போது தகுதியில்லாது போய்விட்டது. இதனாலேயே மக்களுக்கான பொறுப்புகூறலில் அரசு (இராச்சியம்) தோல்வி கண்டுள்ளது எனத் தெரிவிக்கின்றோம். இந்த விடயத்தில் உங்களின் மதத் தலைவரே சர்வதேச விசாரணையைக் கேட்டுள்ளார். அதன்சி நாம் நிச்சயமாக வரவேற்போம். பேராயருக்கு நாம் ஆதரவை வழங்குவோம். அதேபோல் தான் நாமும் எமக்கு நியாயம் வேண்டும் என தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டு வருகிறோம். 2009 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை அதனையே கேட்டு நிற்கின்றோம். – என்றார்.

---

## பளை அரச காணிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ள நிலங்கள் ஏக்கருக்கு 5 லட்சம் ரூபா பணம் இடைத் தரகர்கள் மூலம் பெற்றுக்கொண்டு பகிர்ந்தளிக்கப்படுகின்றன எனக் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோது எந்தவொரு விசாரணையும் இடம்பெறவில்லை. இந்த நிலையில் சொந்த மாவட்ட மக்களின் கருத்திற்கு மதிப்பளிக்காத செயல்பாட்டின் மூலமும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானங்களையும் புறம் ஒதுக்கியும், விடாப்பிடியாக ஆவணங்களை எடுத்துச் சென்றுள்ளனர் காணி அமைச்சில் உள்ளவர்கள். இது,ஏக்கருக்கு 5 லட்சம் ரூபா வீதம் பெற்றுக்கொண்டு தென்னிலங்கையர்களிற்கு காணி வழங்குவதான குற்றச்சாட்டினை மெய்ப்பிப்பதாகவே உள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரம் குடும்பங்களும் கிளிநொச்சியில் 4 ஆயிரத்து 234 குடும்பங்களும் குடியிருக்வே நிலம் இன்றி வாழும் நிலையில் இந்த மக்களிற்கு குறைந்தது இரண்டு பரப்பு காணியையேனும் வழங்குங்கள் என்றுநாம்கெஞ்சாதகுறையாககோரிக்கை விடுத்தோம். அவற்றை எல்லாம் செவிமடுக்காத அரசு தனது போக்கிலேயே செயல்படுகின்றது.

அதாவது வடக்கில் உள்ள நிலங்களை முதலீடு என்னும் பெயரில் தென்னிலங்கையில் உள்ளவர்களிற்கு வழங்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. குறிப்பாகப் பளையில் உள்ள நிலங்கள் தென்னிலங்கை சிங்கள மக்களிற்கு மட்டுமன்றி சீனா நாட்டு நிறுவனத்திற்கும் வழங்கப்படவுள்ளமையோடு பணம் படைத்தவர்களிற்குமே இந்த நிலம் சென்றடையும்.

இந்த நிலையில் மாவட்டச் செயலக வளாகத்தில் இயங்கிய இந்த அலுவலகத்தில் இருந்த ஆவணங்கள் வெளிச்சென்றமை தொடர்பில் மாவட்டச் செயலாளருக்கு தகவல் தெரியாதாம். அதேபோன்று செயலகத்திற்கு வெளியே செயலக வளாகத்தில் இருந்த சொத்து வெளியேறுவதானால் 'கேற் பாஸ்' எனப்படும் வாசல் கடவை அனுமதி எவ்வாறு வழங்கப்பட்டது? அதனை யார் வழங்கினர்?– என்ற விவரங்களைக் கண்டறிவதன் மூலம் இது எவ்வாறு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது என்பதனை அறிந்து கொள்ள முடியும். இதுதான் அரசின் உண்மையான நிகழ்ச்சி நிரல் என்பதனை அரசுடன் ஒட்டி உள்ளவர்கள் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும். – என்றார்.

# கவர்ச்சியான ஆடையில் செல்பவர்களை விட்டுவிட்டு இஸ்லாமிய பெண்கள் முகத்தை மூடுவது குற்றமா?

## ரிஷாத் காட்டத்துடன் மன்றில் கேள்வி



இன்று சில பெண்கள் அணிகின்ற ஆடைகளால் ஆண்கள் பாதைகளில் நடக்க முடியாத நிலையை ஏற்படுத்துகின்றது. இவர்கள் ஆடை அணிந்திருக்கின்றார்களா? இல்லையா என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறு ஆடை அணிபவர்களை எவரும் கருத்தில் கொள்ளவில்லை. மாறாக இஸ்லாமிய பெண்கள் முகத்தை மூடுவது தவறெனக் கூறுகின்றனர்.

இது இஸ்லாமியர்களை பழிவாங்குவதற்காக வெறுமனே இவ்வாறன பொய் பிரசாரங்களை முன்னெடுப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் சபையில் தெரிவித்தார்.

ஆண் – பெண் சமநிலை தொடர்பிலான நாடாளுமன்ற பெண்கள் தெரிவுக் குழு அமைப்பது தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹினி குமாரி விஜயரத்ன கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு பிரேரணையில் உரையாற்றும் போதே இந்த கருத்துக்களை அவர் முன்வைத்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

தற்போது, பெண்களின் உடை பற்றிப் பேசப்படுகின்றது. குறிப்பாக, முகத்தை மூடக்கூடாது எனவும், அது நாட்டுக்கு பாரிய ஆபத்து எனவும் பலவந்தப்படுத்த எண்ணுகின்றார்கள்.

முகத்தை மூடத்தான் வேண்டுமென நான் இங்கு வலியுறுத்தவில்லை. பெண்களைப் பொறுத்தவரையில், அவர்களின் ஆடையை அவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

அத்துடன், இன்று சில பெண்கள் அணிகின்ற ஆடைகள், ஆண்கள் கூட பாதைகளில் நடக்க முடியாத நிலையை ஏற்படுத்துகின்றன. இவர்கள் ஆடை அணிந்திருக்கின்றார்களா? என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறு இருப்பதை யாரும் கண்டு கொள்பவர்களல்லர். ஆனால், இதற்கு மாற்றமாக, இஸ்லாமியர்களை பழிவாங்குவதற்காக வெறுமனே இவ்வாறன பொய் பிரசாரங்களை முன்னெடுக்கின்றார்கள். அதுமாத்திரமின்றி, சில எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றார்கள்.

அதேபோன்று, திருமணச்சட்டத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டுமெனக் கூறப்படுகின்றது. மாற்றங்கள் என்பது காலத்திற்கு ஏற்ப தேவையான ஒன்றாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட அமைச்சரோ, அரசாங்கத்திலிருக்கும் ஒரு சிலரோ இதனை செய்து விட முடியாது.

இஸ்லாமிய அறிஞர்கள், புத்திஜீவிகள் ஆகியோருடன் கலந்துரையாடி இவற்றை மேற்கொள்ள வேண்டுமே தவிர, இரவோடு இரவாக இதனைச் செய்து விட முடியாது. முஸ்லிம்கள், அரசுக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக, பழிவாங்கும் நோக்குடன் இவ்வாறு செய்ய முடியாது.

நபி (ஸல்) பெருமானார் நபியாக வருவதற்கு முன்னர், அந்த நாட்டிலேயே பெண்களை உயிருடன் குழிதோண்டிப் புதைத்தார்கள். அந்தக்காலத்தில் பெண்களுக்கு எந்த மரியாதையும் வழங்கப்படவில்லை. பெருமானார், நபியான பின்னர் தான் பெண்களுக்கான மரியாதையையும் கௌரவத்தையும் வழங்கினார்கள்.

'தாயின் காலடியிலேயே தான் சுவர்க்கம் இருக்கின்றது' என்று பெருமானார் கூறினார்கள். கணவன் நிச்சயமாக மனைவியின் கடமையை செய்ய வேண்டும். மனைவியின் உரிமைகளை வழங்க வேண்டும் என்பதும், பெருமானாரின் வருகைக்குப் பின்னர் சட்டதிட்டங்களாகக் கொண்டுவரப்பட்டன.

அத்துடன், பெண்கள் கல்வி கற்க வேண்டும் எனவும் பெருமானார் வலியுறுத்தினார்கள். எனவே, மார்க்கத்தை சரிவர தெரிந்துகொள்ளாதவர்கள், இஸ்லாமியர் மீது வெறுப்புணர்வு கொண்டவர்களுமே தேவையற்ற விடயங்களைப் பேசித் திரிகின்றார்கள் என்பதை வேதனையுடன் தெரிவிக்கின்றேன். – இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தனிமைப்படுத்தல் விதிமீறிய 3 ஆயிரத்து 337 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 11

தனிமைப்படுத்தல் விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதற்கமைய கடந்த செவ்வாயன்று தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 337 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனவே முகக் கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைப் பேணுதல் என்பன தொடர்ந்தும் பின்பற்றப்பட வேண்டும்.

இவை தொடர்பில் இலங்கை பொலிஸ் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும். இதே போன்று தனிமைப்படுத்தல் விதிமுறைகளுக்கு முரணாக ஏற்பாடு செய்யப்படும் ஒன்றுகூடல்கள், நிகழ்வுகள் தொடர்பிலும் தொடர்ந்தும் அவதானம் செலுத்தப்படும்.– என்றார்.

# 200 இற்கும் மேற்பட்ட பெண்கள் நுண்கடன் திட்டத்தால் தற்கொலை!

## ஹரினி பாலசூரிய தகவல்



நுண்கடன் திட்டத்தால் பாதிக்கப்பட்டு இதுவரை 200 இற்கும் மேற்பட்ட பெண்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். பல லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் பேராசிரியர் ஹரினி பாலசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டின் பொருளாதார முறையால் பெண் தொழில் முயற்சியாளர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். பாரியளவில் நிதி நிறுவனங்களால் பெண்கள் பாரியளவில் சூறையாடப்பட்டு வருகின்றனர். குறிப்பாக நுண்கடன் நிதி நிறுவனங்களின் போலி வாக்குறுதிகளுக்கு ஏமாற்றப்பட்டு, பெற்றுக்கொண்ட கடனை செலுத்தமுடியாத பலர் எமது நாட்டில் இருக்கின்றனர்.

மேலும் நுண்கடன் வழங்கும் நிதி நிறுவனங்களின் பாரிய சூறையாடல்கள் காரணமாக எமது நாட்டில் பல லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 24 லட்சத்து 38 ஆயிரம் பேர் பெண்களாகும். அதேபோன்று 200 பெண்கள் வரை நுண்கடன் திட்டத்தில் சிக்கிக்கொண்டு கடனை செலுத்த முடியாமல் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

மேலும் நுண்கடன் நிதி நிறுவனங்கள் மிகவும் மோசமான முறையில் பெண்களை இலக்குவைத்து இந்த கடன் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றன. இலாபத்தைவிடவும் பாரிய சூறையாடலையே மேற்கொள்கின்றன.

அதனால் நுண்கடன் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள், அவற்றின் சட்ட முறைகள் தொடர்பாக கணக்காய்வொன்றை மேற்கொள்ளவேண்டும். இது தொடர்பாக நாடாளுமன்ற செயற்குழுவில் ஆராய்ந்து முறையான செயற்திட்டங்களை ஏற்படுத்த வேண்டும்.

அதேபோன்று நுண்கடன் திட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு கடன் நிவாரணங்களை வழங்குவதாக பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்டபோதும் அந்த நிவாரணங்கள் இதுவரை அந்த பெண்களுக்கு கிடைக்கவில்லை. – என்றார்

# இனங்களுக்கிடையில் வெறுப்புணர்வுகளை தூண்டும் புகைப்படம் பதிவேற்றியவர் கைது!

இனங்களுக்கு இடையில் கருத்து மோதல் ஏற்படும் விதத்தில் வெறுப்புணர்வை தூண்டும் விதமாக முகப்புத்தக சமூக வலைத்தளத்தில் புகைப்படங்களை பதிவேற்றிய ஒருவரை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

மாத்தளை – யட்டவத்த பகுதியில் வைத்து சந்தேக நபர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சிறப்பு பொலிஸ் குழுவினரால் இவ்வாறு கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

53 வயதான குறித்த நபர் கடந்த மார்ச் மாதம் 4 ஆம் திகதி அல்லது அண்மித்த நாள்களில் இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் முகப்புத்தகத்தில் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார்.

சந்தேகநபர் ஏப்ரல் 21 தாக்குதல்தாரிகளின் புகைப்படங்களுடன் மேலும் சிலரின் புகைப்படங்களை உள்ளடக்கி இனங்களுக்கு இடையில் முரண்பாட்டையும் வெறுப்புணர்வையும் தூண்டும் விதத்தில் புகைப்படங்களை பதிவேற்றினார் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

எம்.பி. ஏக்கநாயக்க எனும் பெயரில் முகப்புத்தக கணக்கொன்றைப் பயன்படுத்தியே சந்தேக நபர் இந்த வேலைகளை செய்துள்ளார். சந்தேக நபருக்கு எதிராக தண்டனை சட்டக் கோவையின் 120 ஆம் அத்தியாயத்தின் கீழும், கணினிக் குற்றங்கள் தொடர்பிலான சட்டத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் கீழும் விசேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சந்தேக நபர் கொழும்பு கோட்டையில் உள்ள சி.ஐ.டி. தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# தவக்காலச் சிந்தனை

அருட்கலாநிதி டேவிற் வி. பற்றிக். சு.ம.தி



## எல்லோரையும் நல்லோராக்கல்

இன்றைய காலகட்டத்தில் இளையோர் பலர் தடுமாறி பயணத்தை மேற்கொள்ளும் இந்த நாள்களில் தவக்காலம் பிரதானமான செய்தியை வழங்கி நிற்கின்றது.

இறைவனின் இரக்கம், இறைவனின் பாரபட்சமின்மை, அன்புறவு, எல்லோரையும் குணமாக்கி நல்லோராய் வாழ வைக்கும் இயேசு கிறிஸ்துவின் ஆற்றலை வெளிக்காட்டும் காலமாகத் தவக்காலம் அமைகின்றது.

'எலியாவின் காலத்தில் மூன்றரை ஆண்டுகளாக வானம் பொய்த்தது நாடெங்கும் பெரும் பஞ்சம் உண்டானது. அக்காலத்தில் இஸ்ராயேலரிடையே கைப்பெண்கள் பலர் இருந்தனர். ஆயினும், அவர்களுள் எவரிடமும் எலியா அனுப்பப்படவில்லை. சீதோனைச் சேர்ந்த சாரிபாத்திரத்தில் வாழ்ந்த ஒரு கைம் பெண்ணிடமே அனுப்பப்பட்டார்." (லூக்கா: 4:26)

வழிகாட்டும் பலரை எல்லோருக்கும் பயன்படுவது போல் வாழ்வு தரும் இயேசுவின் வார்த்தை எல்லோரையும் நல்லோராய் வாழவைக்கிறது. பாரபட்சமில்லா, நிபந்தனையில்லா இயேசுவின் பரிவன்பைப் பகிர்ந்து வாழவே நாம் அனைவரும் அழைக்கப்படுகின்றோம்.

தூரப்போகும் இளையோரை நேசக் கரம் நீட்டி, அவர்களை அவர்களாக ஏற்று வாழ வைக்க எம்மால் என்னென செய்ய முடியுமோ அதனை நிறைவேற்ற முயல்வதே எமது இலக்காக இருக்க வேண்டும் என இந்தத் தவக்காலம் எமக்கு அழைப்பு விடுக்கின்றது. தனித்தோ, குடும்பமாகவோ, குழுவாகவோ தவக்கால காலத்தில் இணைந்து செயற்படுவோம்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சர்வதேச விசாரணை ஏன்?

**நாட்டில் ஆட்சிகள் மாறுகின்றபோது அரசாங்கங்கள் (Governments) வரும், போகும். ஆனால் அரசு (State) மாறுவதில்லை.**

**அரசாங்கங்கள் மாறினாலும் நாட்டின் அரசு என்ற முறையில் அதன் பொறுப்புடைமை – கடமைப்பாடு – மாறுவதில்லை. தொடரும்.**

**நேற்று நாடாளுமன்றத்தில் இதனைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.**

**ஈஸ்டர் ஞாயிறுத் தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.**

**இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள், புலனாய்வுகள் முறையாக – சரியாக – நீதி, நியாயப்படி – நடைபெறவில்லை என்று கருதி அதிருப்தி அடைந்துள்ள கிறிஸ்தவ திருச்சபையின் தலைவர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை, இந்த விடயம் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும் என்ற முடிவுக்கு வந்து, அந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றமையைத் தனது உரையில் சுட்டிக்காட்டியிருக்கின்றார் சுமந்திரன் எம்.பி.**

***“நாங்கள் சர்வதேச விசாரணைக்கு இடமளிக்கக் கூடாது, இது எங்களது உள்நாட்டு விவகாரம், எங்கள் விடயத்தை நாங்களே பார்த்துக் கொள்வோம் என்று கூறியவர்கள்தான் இன்று சர்வதேச விசாரணைக் கோரிக்கையை வெளிப்படையாக முன்வைத்திருக்கின்றார்கள். இந்த நிலைமை ஏன் வந்தது?”*** **– என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார் சுமந்திரன்.**

***“ஒரே காரணம், அரசு தோற்று விட்டது. தனது மிக முக்கிய கடப்பாட்டில் அரசு தோல்வி கண்டு விட்டது. பொறுப்புக் கூறலை நிறைவேற்றும் தனது கடமையிலிருந்து அரசு தவறி விட்டது. அதனால்தான் சர்வதேச விசாரணையைக் கோர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது”*** **– என்று சட்டவாக்கல் சபையின் உறுப்பினருக்கு அவர் சுட்டிக்காட்டினார்.**

**இன்னொரு நியாயத் தத்துவத்தையும் அவர் இலங்கையின் சட்டவாக்கல் உரிமை பெற்ற உறுப்பினர்களிடம் – நாட்டின் நாடாளுமன்றத்திடம் – தெளிவுபடுத்தினார்.**

**ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் உறுப்பு நாடு என்ற முறையில் சர்வதேச சிறப்புரிமைகளை இலங்கை நாடு பெற்றுப் பிரயோகிக்கும் அதேவேளையில் அந்த உறுப்புரிமை மூலம் சுமத்தப்படும் கட்டாயக் கடப்பாடுகளையும், பொறுப்புகளையும் கூட இலங்கை நாடு நிறைவேற்றியே தீர வேண்டும்.**

**ஐக்கய நாடுகள் சபையையும், சர்வதேச சமூகத்தையும் பார்த்து இலங்கை தான் தனித்துவ சுயாதிபத்திய இறைமை கொண்ட நாடு என்று கூறும் அதே சமயம், அந்த இறைமையின் பெயரால் நாட்டின் மீது சுமத்தப்படும் கட்டாயக் கடப்பாட்டையும் நிறைவு செய்ய வேண்டிய முழுப் பொறுப்பும் கூட அதற்கு உள்ளது. அதனை இலங்கை எந்தக் காரணம் கொண்டும் தட்டிக் கழித்து விட முடியாது. அப்படித் தட்டிக் கழிக்க முயன்றால் அதன் விளைவுகள் விபரீதமாகும்.**

**தன்னுடைய மக்களுக்கு நீதியை நிலைநாட்டி, பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவது, அந்த மக்களின் பெயரால் இறைமையைப் பிரயோகிக்கும் அரசின் கட்டாயக் கடப்பாடாகும். இறைமை மக்களுக்குரியதேயன்றி அரசுக்குரியதல்ல.**

**அந்த இறைமையை – அதன் பெயரால் தனக்குரிய கடப்பாட்டை – அரசுகள் நிறைவேற்றத் தவறும் போது – நீதி மறுக்கப்படும் போது – மக்கள் அதற்காகக் குரல் எழுப்புவார்கள்.**

**இறைமை ரீதியான தனது கடப்பாட்டை அரசு நிறைவேற்றாமல் இப்படித் தவறும் போது, அதில் சர்வதேசம் தலையிடுவது தவிர்க்க முடியாததாகின்றது.**

**அந்த வகையில்தான், ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் விடயத்தில் நீதி சரிவர நிலைநாட்டப்படாத சூழலில், நீதிக்கான கோரிக்கையை சர்வதேச சமூகத்தின் முன்னால் வைக்கின்றார் கர்தினால் மல்கம் ரஞ்சித் என்று குறிப்பிட்டு, அந்தக் கோரிக்கை இயற்கை நீதி முறையிலும் சர்வதேச சட்டக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் நியாயமானது என்பதை எடுத்துரைக்கின்றார் சுமந்திரன்.**

**ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களில் சுமார் இரு நூற்றியைம்பது பேர் வரை உயிரிழந்தனர். ஐந்நூறு பேர் வரை படுகாயமடைந்தனர். அது பேரிழப்பே. அது நடந்து இரண்டு வருடங்கள் கடந்தும் நீதி கிடைக்கவில்லை என்பதற்காகக் கர்த்தினால் குறிப்பிடுகின்றமை போல சர்வதேசத்திடம் நீதி, நியாயம் கோருவது முறையானதுதான்.**

**அப்படியாயின் –**

**தமது உறவுகளில் பல பத்தாயிரம் மக்கள் கோரமாகக் கொன்றொழிக்கப்படவும், மேலும் பல பத்தாயிரம் பேர் படுகாயமடையவும், அளவு கணக்கில்லா சொத்துக்கள் அழிக்கப்படவும் காரணமான போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளே நடைபெறாமல் பன்னிரண்டு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், அது குறித்து சர்வதேச விசாரணையைக் கோரும் தமிழரின் வேண்டுகோளில் யாது தவறு இருக்க முடியம்?**

**இதைத்தான் நாடாளுமன்றத்தில் கேட்டிருக்கின்றார் சுமந்திரன் எம்.பி.**

# துறைமுக மேற்கு முனைய அபிவிருத்தியில் இந்திய அரசின் பங்குபற்றல் இல்லையாம்!

## உதய கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 11

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய அபிவிருத்திக்கு இந்திய அரசாங்கம் அதானி நிறுவனத்தை பரிந்துரைத்ததன் காரணமாகவே மேற்கு முனைய அபிவிருத்தியில் அந்நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் இணைந்து செயற்பட தீர்மானித்தது. இதில் இந்திய அரசாங்கத்தின் பங்குபற்றுதல் இல்லை என்று அமைச்சரவை இணை பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை இணையவழியூடாக நடைபெற்றது. இதன்போது மேற்கு முனைய விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது அமைச்சரவை இணை பேச்சாளர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிழக்கு முனைய அபிவிருத்திக்கு இந்திய அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட முதலீட்டு நிறுவனமாக அதானி நிறுவனம் காணப்பட்டது.

எனினும் பின்னர் துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையினூடாக கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்ததோடு, மேற்கு முனையத்தை இந்தியா மற்றும் ஜப்பானுடன் இணைந்து கூட்டு முயற்சியில் அபிவிருத்தி செய்வதற்கும் தீர்மானித்தது.

இதே வேளை கிழக்கு முனைய அபிவிருத்திக்காக இந்திய அரசாங்கத்தால் ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்ட நிறுவனத்துடனேயே மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்தது. அதற்கமைய அபிவிருத்திக்கான இடம் மாற்றப்பட்டுள்ளதே தவிர முதலீட்டு நிறுவனம் மாற்றப்படவில்லை.

இந்நிலையிலேயே மேற்கு முனைய அபிவிருத்தியில் எமது பங்குபற்றல் இல்லை இந்திய அரசாங்கம் என்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது. எனவே தான் இலங்கை அரசாங்கம் அதானி நிறுவனத்துடன் நேரடி தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது.



மேற்கு முனைய அபிவிருத்தி தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு தரப்புக்களினாலும் அறிவிக்கப்பட்ட இரு நிலைப்பாடுகளும் சரியானவையாகும். மேற்கு முனைய அபிவிருத்திக்கு இந்திய அரசாங்கத்தால் எந்தவொரு முதலீட்டு நிறுவனமும் பரிந்துரைக்கப்படவில்லை.

அதற்கமையவே இந்தியாவின் அறிவிப்பு சரியெனக் கூறுகின்றோம். இதே வேளை கடந்த வார ஊடகவியலாளர் மாநாட்டில், ‘இந்தியாவால் கிழக்கு முனைய அபிவிருத்திக்காக பரிந்துரைக்கப்பட்ட நிறுவனத்துடனேயே இலங்கை இணைந்து செயற்படுகிறது.’ -என்று அமைச்சரவை பேச்சாளர் கூறிய விடயமும் சரியானதாகும்.

அதற்கமையவே முதலீட்டு நிறுவனத்தில் மாற்றமின்றி மேற்கு முனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்தது. இதனையே இந்தியாவால் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனத்துடன் இலங்கை இணைந்து செயற்படுவதாக அறிவித்தோம். எனினும் ஜப்பான் இதுவரையில் எவ்வித முதலீட்டாளர்களையும் பரிந்துரைக்கவில்லை.

கிழக்கு முனையம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் , அதனை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. எனினும் மேற்கு முனைய அபிவிருத்தி தொடர்பில் அவ்வாறான எதிர்ப்புக்கள் வெளியிடப்படவில்லை. சிலர் மாத்திரமே இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

எனினும் பெருமளனவானோர் மேற்கு முனைய அபிவிருத்திக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதே வேளை கிழக்கு முனையத்தை வெளிநாட்டுக் கடன் பெற்று அபிவிருத்தி செய்வதற்கு பதிலாக, தேசிய வங்கிகளிடமிருந்து கடன் பெற்று துறைமுக அதிகாரசபையினூடாக அபிவிருத்தி செய்ய தீர்மானித்துள்ளோம் என்றார்.

# ஈஸ்டர் தாக்குதல் பணம் கொடுத்த விவகாரம்: மஹிந்தவிடம் விசாரணை இடம்பெறவில்லை

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்கான ஒரு கருவியாக ராஜபக்ஷவினர் ஈஸ்டர் தாக்குதல்களைப் பயன்படுத்தினர் என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதிதாக எதுவும் செய்யவில்லை என்றும், 60 ஆயிரம் பக்க அறிக்கையின் 20 ஆயிரம் பக்கங்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முக்கிய குற்றவாளிகளை அறிக்கை வெளிக்கொண்டுவரவில்லை என்றும் சஹ்ரான் தான் முக்கிய தற்கொலை குண்டுதாரி என அந்த அறிக்கை தெரிவிப்பதாக கூறிய பிமல் ரத்நாயக்க, இந்த விடயம் அனைவருக்கும் தெரிந்த ஒன்று எனக் கூறினார்.

உளவுத்துறை தீவிரவாத அமைப்புகளுக்குப் பணம் கொடுத்தது என்ற உண்மையை பல ஆண்டுகளுக்கு முன்பு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் இந்த உண்மை தொடர்பாக குறித்த ஆணைக்குழு தற்போதைய பிரதமரிடமோ அல்லது தற்போதைய ஜனாதிபதியிடமோ எந்த அறிக்கைகளையும் பதிவு செய்யவில்லை என்றும் பிமல் ரத்நாயக்க குற்றம் சாட்டினார்.

# ஆயிரத்து 500 கோடி டொலரை கடனாக வழங்க சீனா அனுமதி!

## அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு

இலங்கைக்கு 1,500 கோடி அமெரிக்க டொலரை கடனாக வழங்க சீனா அனுமதியளித்துள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடன் தொகையை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இலங்கையால் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் கூறினார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை அறிக்கை: குற்றவியல் விடயங்கள் சட்டமா அதிபரே தீர்மானம்!



## அரசாங்கம் அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் சட்ட ரீதியானதும், அரசியல் – சமூக ரீதியானதுமான இரு வகை பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய குற்றவியல் வழக்குத் தொடர்வது தொடர்பில் சட்டமா அதிபரால் மாத்திரமே தீர்மானம் எடுக்கப்படும். இந்த விடயங்களில் வேறு தரப்பினரின் தலையீடுகள் காணப்படா என அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

மேற்படி அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள ஏனைய பரிந்துரைகளில் நடைமுறை சாத்தியமான முறையில் அமுல்படுத்தப்படக் கூடியவை தொடர்பில் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவின் அறிக்கை வெகுவிரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றும் இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரைகள் மாத்திரமே உள்ளடங்குகின்றன. இலங்கை வரலாற்றில் எந்தவொரு ஜனாதிபதி ஆணைக் குழுவாலும் வழங்கப்பட்ட சகல பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. குறித்த அறிக்கையில் சட்ட ரீதியான பரிந்துரைகள் மற்றும் அரசியல் – சமூக பரிந்துரைகள் என இரு வகை பரிந்துரைகள் உள்ளன. சட்ட ரீதியான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருப்பின் அவை சட்டமா அதிபரின் பொறுப்பின் கீழ் உள்ளடக்கப்படும். எனவே, சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதா இல்லையா என்பதை சட்டமா அதிபர் மாத்திரமே தீர்மானிப்பார். இதில் வேறு யாருடைய தலையீடும் ஏற்படா தவாறு நாம் அவதானத்துடனிருப்போம்.

இலங்கையில் எந்தவொரு பிரஜைக்கு எதிராகவும் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்வதா? , இல்லையா என்பது தொடர்பிலும் சட்டமா அதிபரால் மாத்திரமே தீர்மானிக்க முடியும். எனினும் வெவ்வேறு நிறுவனங்களை அமைத்தல், தற்போது காணப்படும் சட்டங்களை மறுசீரமைத்தல், கொள்கை ரீதியான விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறை சாத்தியமான முறையில் அமுல்படுத்த முடியுமா, அமுல்படுத்த முடியுமெனில் எவ்வாறு அமுல்படுத்துவது என்பதற்கான அறிக்கையை சமர்ப்பிப்பதற்காகவே அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் அறுவரடங்கிய அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் அறிக்கை வெகு விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும். இந்தக் குழுவில் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பான விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா. ஏனைய விடயங்கள் பற்றியே அவதானம் செலுத்தப்படும்.– என்றார்.

இது தொடர்பில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றதும், அதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டதும் கடந்த அரசாங்கத்திலாகும். இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் தற்போதைய அரசாங்கத்தின் தலையீடுகள் எவையும் இல்லை. சுயாதீனமாக முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட மிகக் குறுகிய காலத்துக்குள் நாடாளுமன்றத்திலும் , சட்டமா அதிபரிடமும் ஏனைய மதத் தலைவர்களிடமும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நாம் துரிதமான செயற்பாடுகளை முன்னெடுப்போம். இதில் மறைப்பதற்கு எவ்வித காரணிகளும் எமது அரசாங்கத்திடமில்லை. – என்றார்.

## யாழ். பல்கலையில் தொற்று நீக்கும் பணி!





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் மாணவ ஒழுக்காற்று அதிகாரிகளில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான மேலதிக முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொற்று அடையாளப்படுத்தப்பட்டதை அடுத்து, நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வழிகாட்டல்களுக்கு அமைய, பல்கலைக்கழக கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் தடுப்புச் செயலணி, தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான மேலதிக முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மாணவ ஒழுக்காற்று அதிகாரி, கடமை நிமித்தம் பல்கலைக்கழகத்தினுள் நடமாடிய அனைத்து இடங்களிலும், நேற்று தொற்று நீக்கி விசிறப்பட்டுள்ளதுடன், மாணவ ஒழுக்காற்று அதிகாரி அலுவலகத்தில் பணிபுரியும் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்களிடம் நேற்றுக்காலை, பி.சி.ஆர். பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

அதேநேரம், கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் குறித்த மாணவ ஒழுக்காற்று அதிகாரியும் கலந்து கொண்டிருந்தமையால், அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பலர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களில் பலர் கொரோனாத் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் எனினும், அவர்கள் அனைவரையும் கட்டம் கட்டமாகப் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத்; தெரிவிக்கப்படுகிறது.

# அதிநவீன ரயில் பெட்டிகள் நாட்டுக்கு வந்தடைந்தன!

கொழும்பு, மார்ச் 11

ரயில் இந்தியா தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சேவை (ரைட்ஸ்) இலங்கை ரயில்வேக்கு 160 அதி நவீன ரயில் பெட்டிகளை வழங்கவுள்ளது.

இதன் ஒரு பகுதியாக 10 அதிநவீன ரயில் பெட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இந் நிலையில் இது தொடர்பாகக் கொழும்பில் உள்ள இந்திய உயர் தூதரகம் நேற்று புதன்கிழமை பதிவிட்ட தனது பேஸ்புக் பதிவில் –

10 இந்தியவடிவமைப்பு ரயில் பெட்டிகள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த நிலையில் போக்குவரத்துத் துறைசார் இந்திய –இலங்கை ஒத்துழைப்பு விஸ்தரிக்கப்படுகின்றது.

இந்திய கடனுதவியில் றிட்ஸ் லிமிடெட் நிறுவனம் இலங்கை ரயில்வேக்கு வழங்கும் 160 ரயில் பெட்டிகளின் ஓர் அங்கமாக இவை விநியோகிக்கப்படுகின்றன எனக் கூறியுள்ளது.

அண்மையில், கொழும்பில் உள்ள கிழக்கு கொள்கலன் முனையத்தின் வளர்ச்சியில் இந்திய மற்றும்



ஜப்பானிய பங்களிப்பை ஒருதலைப்பட்சமாக இரத்து செய்த பின்னர், மேற்கு கொள்கலன் முனையத்தை உருவாக்க இலங்கை ஒப்புதல் அளித்தது.

இந்தியாவும் இலங்கையும் 2019 ஆம் ஆண்டில் 'பொருளாதாரத் திட்டங்களுக்கான ஒத்துழைப்பு' குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. கொள்கலன் முனையத்தின் வளர்ச்சி மற்றும் செயற்பாடு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள திட்டங்களில் ஒன்றாகும், இது ஒரு கூட்டு முயற்சியாகும்.

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை கூட்டமைப்பு தவிசாளர் பதவி விலகல்!

கூட்டமைப்பு வசம் உள்ள வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் றெலோ சார்பாக, தவிசாளர் பதவி வகித்த து.நடராஜசிங்கம், (ரவி) பதவி விலகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முறை இடம்பெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலில், வவுனியா – தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது.

அதற்கமைய சபையின் தவிசாளர் பதவியை, ஆட்சிக் காலப் பகுதியில் இரண்டரை வருடங்கள் என பங்கிட்டு வகிப்பதற்கு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட் மற்றும் றெலோ கட்சிகளுக் கிடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

அதற்கமைய வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் து.நடராஜசிங்கம் தனது பதவியை இராஜினாமா




செய்துள்ளமையுடன், அது தொடர்பாக அவர் கையெழுத்திட்ட கடிதம் நேற்றைய தினம் (புதன்கிழமை) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திடம் கையளிக்கப்பட்டு, பிரதேச சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த கடிதம், மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, முல்லைத்தீவு – கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலும் மாற்றம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹெரோயினுடன் இருவர் கைது!

மாத்தறை, தெய்சந்தர பகுதியில் 68 கிலோகிராம் ஹெரோயினுடன் சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று அதிகாலை தெய்சந்தர பொலிஸ் பிரிவில்– –தெனகம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்பேதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் நீர்கொழும்பு, கட்டான பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஆண்ணொருவரும், கண்டி பகுதியைச் சேர்ந்த 38 வயதான பெண்ணொருவரும் ஆவர்.

இந் நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில், இலங்கையின் தெற்கு பகுதி போதைப்பொருள் விநியோகத்துக்கான மையமாக மாறி வருவதை அவதானித்து வருவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

# பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் இன்று திறப்பு



பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் அனைத்து வான் கதவுகளும் இன்று வியாழக்கிழமை இரவு 10 மணி முதல் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிவரை திறக்கப்படும் என்று இலங்கை மகாவலி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

வருடாந்த ஆய்வு நடவடிக்கைகளுக்காக நீர்த்தேக்கத்தின் முழு நீரையும் வெளியேற்றவுள்ளமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் நீர்த்தேக்கத்தை அண்மித்த தாழ் நில பிரதேச வாழ் மற்றும் மகாவலி ஆற்றின் கரையோரப் பகுதியில் வாழும் மக்களை அவதானத்துடன் இருக்குமாறும் மகாவலி அதிகாரசபை அறிவுறுத்தியுள்ளது.

# சாரா இந்தியாவில் உள்ளார் என்றால் ஒப்படைக்குமாறு நாம் கோருவோம்!

## உதய கம்மன்பில தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சாரா என்ற சந்தேகநபர் இந்தியாவிற்கு தப்பிச் சென்றுள்ளார் என நம்பப்படுகின்றதே தவிர, அந்த தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை. இவ்விடயம் உறுதிப்படுத்தப்படுமாயின் அவரை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் கோருவோம் என அமைச்சரவை இணைபேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது சாரா தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது இதனைக் கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்–

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சாரா என்ற சந்தேகநபர் இந்தியாவிற்கு தப்பிச் சென்றுள்ளார் என நம்பப்படுகிறதே தவிர, அது உறுதிப்படுத்தப்பட்ட விடயமல்ல. இந்தியாவில் அவர் இருக்கிறார் என அல்லது அந்நாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளார் எனவோ, அந்நாட்டில் வாழ்வதாகவோ உத்தியோகபூர்வ தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.

சாரா இந்தியாவில் இருக்கிறார் என்று உறுதிப்படுத்தப்பட்டால், அவரை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு வாய்ப்பளிப்பதோடு, குறித்த பெண் இலங்கை பிரஜை என்பதால் சட்ட விரோதமாகவே நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளமையால் மீண்டும் இலங்கையிடம் ஒப்படைக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் கோருவோம். எவ்வாறிருப்பினும் அவர் இந்தியாவிற்கு தப்பிச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றதே தவிர அது உறுதிப்படுத்தப்படவில்லை. – என்றார்.

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை காப்பாற்றுவதற்கு அரசு முயற்சி!

## சாடுகிறார் விமல்



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்களை காப்பாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி மேற்கொள்வதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் விமல் வீரவன்ஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு –

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய அனைவருக்கு எதிராகவும் குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதேவேளை ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பலரை, தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், காப்பாற்றுவதற்கு முயற்சித்து வருகின்றனர்.

மேலும், குறித்த தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மறைக்கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 1,000 ரூபா சம்பள அதிகரிப்பு வெளியாகியது வர்த்தமானி!

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,000 ரூபாவாக நிர்ணயித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தேயிலை மற்றும் இறப்பர் சார் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,000 ரூபாவாக நிர்ணயித்தே குறித்த வர்த்தமானி தொழில் அமைச்சின் செயலாளரால் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானமானது, மார்ச் மாதம் 5 ஆம் திகதி முதல் செல்லுபடியாக வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, குறைந்த பட்ச நாளாந்த சம்பளமாக 900 ரூபாவாகவும் வரவு - செலவுத் திட்ட சலுகைக் கொடுப்பனவாக 100 ரூபாவாகவும் சேர்த்து நாளாந்த சம்பளம் 1,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விமானப் படைக்கு புதிய பிரதானி நியமிப்பு

இலங்கை விமானப்படையின் பிரதானியாக ஏயர் வைஸ் மார்ஷல் பிரசன்னா பயோவை மார்ச் 09 முதல் அமுல்படுத்தும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.



விமானப்படை தலைமையகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற விழாவில், விமானப் படைத்தளபதி ஏயர் மார்ஷல் சுதர்சன பதிரானவிடம் இருந்து ஏயர் வைஸ் மார்ஷல் பிரசன்னா பயோ நியமனக் கடிதத்தைப் பெற்றார்.

# வாள்கள் மற்றும் ஆயுதங்கள் இறக்குமதி தொடர்பாக விசாரணை செய்யப் பணிப்பு!

## விடுத்தார் சட்டமா அதிபர்

கொழும்பு, மார்ச் 11

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் வாள்கள் மற்றும் ஆயுதங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுவிற்கு அமைய இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.



அத்தோடு குறித்த சந்தேகநபர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# சுழற்சிமுறையிலான உணவு தவிர்ப்பு 11 ஆவது நாளாக யாழில் நடந்தது!

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் 11 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

நீதிவேண்டிய இந்த போராட்டம் நல்லூர் – நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்தப் போராட்டத்துக்குக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் பிரதிநிதிகள், சிவில் அமைப்பினர், மதத் தலைவர்கள் எனப் பலரும் தனது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதினூடாக அரசாங்கத்தால் புரியப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழ் இனத்துக்கு எதிராக இன வழிப்பு என்பவற்றுக்கு சர்வதேச நீதி வேண்டும்.

தமிழ் இனத்தின் மீதானா இனவழிப்பு தொடராது இருப்பதற்குத் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து குறித்த சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



இன்று மகா சிவராத்திரிதினம். அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

# இருத்துவோம் சிவநாமத்தை; திருத்துவோம் நம் மனமதை!



மனிதர்களை மாண்புடன் வாழச்செய்வதற்கு நல்ல நெறிகளைக் காட்டி நிற்கும் உன்னத பணியினை சமயம் ஆற்றி வருகிறது. சமயம் என்பது சமூகத்தின் ஆணிவேர் எனலாம். காட்டில் விலங்குகளுடன் வாழ்ந்த மனிதனின் வாழ்வில் காலத்தின் மாற்றத்தினால் ஏற்பட்ட பலவித வளர்ச்சிப் படியில் சமயம் என்பது மிகவும் உன்னதமானது, உயர்ந்தது என்று கருத முடிகிறது. விலங்குகளுடன் இருந்த மனிதன், விலங்காய் விளக்கமின்றி இருந்த மனிதன் விலங்கினத்தினின்று வேறுபட்டு, மாறுபட்டு நிற்பதற்கு சமயமும் அது சார்ந்த கொள்கைகளும் மடை மாற்றம் செய்திருக்கின்றன என்பது மறுத்துவிடக் கூடிய விடயமன்று.

உலகின் தொன்மையான சமயம், சனாதனதர்மம், பல வாழ்வியல் கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்ட சமயம், நமது சைவசமயம் எனும் பொழுது நாமெல்லாம் எவ்வளவு பெருமை கொள்ளுதல் வேண்டும். பக்திப் பாடல்களை கொண்டிருக்கும் சமயம் கூட எங்கள் சைவசமயமே ஆகும். இசையினால் இறைவனை அடையலாம் என்னும் பாங்கில் பண்கள் பல கொண்ட பக்திப் பனுவல்களை தன்னகத்தே வைத்திருக்கும் சமயமும் எமது சைவசமயமே ஆகும்.

எங்கள் சைவசமயம் இறை வழிபாட்டினை இலகுவாக்குவதற்கு பல சுலபமான வழிகளையெல்லாம் காட்டியிருக்கிறது. அவ்வழிகள் யாவுமே ஆரோக்கியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன என்பதுதான் மிகவும் முக்கியமாகும்.



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(முன்னாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

" உணவு என்பது மிகவும் முக்கியமானது. அதேவேளை அந்த முக்கியமான உணவுகூட எங்களின் உள்ளத்தை , உடல் நலத்தைக் கூடப் பாதித்தும் விடலாம். அதனால் உணவின் அளவைக் குறைத்தலும், சிலவேளை தவிர்த்தலும், வாழ்வில் நல்ல ஆரோக்கியத்துக்கும் நல்ல சிந்தனைக்கும் கூட ஆதாரமாக அமையலாம் என்பதை எமது சமயம் உணர்ந்த காரணத்தால் உணவினை ஒறுத்து இருப்பதை விரதம் என்று உயர்வு கொடுத்து, அதனுடன் தெய்வீகத்தையும் தொடர்புபடுத்தி வாழ்வியலில் முக்கிய நடைமுறை ஆக்கிவிட்டது. "

உணவு என்பது மிகவும் முக்கியமானது. அதேவேளை அந்த முக்கியமான உணவுகூட எங்களின் உள்ளத்தை , உடல் நலத்தைக் கூடப் பாதித்தும் விடலாம். அதனால் உணவின் அளவைக் குறைத்தலும், சிலவேளை தவிர்த்தலும், வாழ்வில் நல்ல ஆரோக்கியத்துக்கும் நல்ல சிந்தனைக்கும் கூட ஆதாரமாக அமையலாம் என்பதை எமது சமயம் உணர்ந்த காரணத்தால் உணவினை ஒறுத்து இருப்பதை விரதம் என்று உயர்வு கொடுத்து, அதனுடன் தெய்வீகத்தையும் தொடர்புபடுத்தி வாழ்வியலில் முக்கிய நடைமுறை ஆக்கிவிட்டது. அந்த வகையில் சிவராத்திரி விரதம் மிகவும் முக்கியத்துவமும் பெருமையும் உடையதாக சைவர்களால் கருதப்படுகிறது.

பசித்திரு – தனித்திரு – விழித்திரு. இவை தத்துவார்த்தமான பதங்களாகும். சொல்லுவதற்கு கவிதை நடை போல இருந்தாலும் உயரிய பொருளினை உள்ளடக்கி நிற்கிறது என்பதைக் கருத்திருத்த வேண்டும். பசித்திருவில் – ப, தனித்திருவில் – த , விழித்திருவில் – வி , இம்மூன்று எழுத்தையும் சேர்த்தால் வருவது பதவி என்னும் சொல்லாகும். பசித்து தனித்து விழித்து இருந்தால் என்ன பதவி கிடைத்துவிடும் என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா? பதவிகளுக்கெல்லாம் உயர்ந்த பதவி அதாவது இறைவனது அருள் என்னும் பதவி, மனமாசு அகன்று மனம் மாண்புறும் பதவி, ஆணவமெனும் அழுக்கு அகன்று ஆண்டவன் நினைப்பு அகத்தில் எழுந்திடும் பதவி என்று பல பதவிகள் எமக்கு வாய்க்கும் என்று எமது சைவசமயம் எடுத்து இயம்பி நிற்கிறது.

சிவராத்திரி நோன்பு காலத்தில் ஆலயத்துக்குச் சென்று அரட்டை அடிப்பதோ வீண் வம்புகள் பேசுவதோ, மற்றவரைக் குறை சொல்லுவதோ தவிர்க்கப்பட வேண்டியதாகும். தனித்திருங்கள். புசிப்பதைத் தவிருங்கள். இறை எண்ணத்துடன் இறை புகழ் பாடி விழித்திருத்திருங்கள். இப்படி இருப்பதுதான் சிவராத்திரிக்கு நமது சமயம் கொடுக்கும் முக்கியத்துவம் எனலாம்.

விழித்திருக்க வேண்டும் என்பதற்காக சினிமாப் படங்களைப் பார்ப்பதோ, நாடகங்களைத் தொலைக்காட்சியில் பார்ப்பதோ, சீட்டாடுவதோ, களியாட்ட விடுதிகளை நாடுவதோ முறையல்ல. விழிப்பது முக்கியமானதுதான். ஆனால் அந்த விழித்திருக்கும் நேரத்திலும் இறை நினைப்பாய் இருப்பதுதான் விழிப்புக்கு உரிய அர்த்தமாய் அமையும் என்பதையும் யாவரும் கருத்தில் இருத்துவது அவசியமாகும்.

கருடபுராணம், அக்னிபுராணம், அருணாசலபுராணம், சிவராத்திரி புராணம் யாவும் சிவராத்திரியைப் பற்றி, அதன் மகிமைகள் பற்றி யெல்லாம் எடுத்தியம்புகின்றன. ஆலகால வித்தை ஈசன் உண்ட நிகழ்ச்சியும், அடிமுடி தேடிய பிரம்மா விஷ்ணுவுக்கு ஒளிப் பிளம்பாகக் காட்சி கொடுத்த சம்பவமும், அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற்றதும், கண்ணப்பர் ஈசனுக்குத் தனது கண்ணைப் பிடுங்கி அப்பியதும், அதனால் கண்ணப்பன் மோட்சம் பெற்றதும் , மார்க்கண்டேயருக்காக ஈசன் எமனைக் காலால் உதைத்ததும், குபேரன் செல்வந்தனாகியதும் என்று பல அற்புதங்கள் நிகழ்ந்த தினமாக சிவராத்திரி விளங்குகிறது என்னும் நம்பிக்கை பலகாலமாக இருப்பதும் மனங்கொள்ளத் தக்கதாகும்.

மாதம் மாதம் சிவராத்திரி வருகிறது. ஆனால் மாசி மாதத்தில் வருகின்ற சிவராத்திரியைத்தான் மகாசிவராத்திரி என்று உயர்வுடன் அனுட்டிக்கின்றோம். மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி ஏன் இவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறது என்பதற்கு புராணக் கதைகளை விட அறிவியல் ரீதியான விளக்கமே அனைவருக்கும் பயனை நல்கும் அல்லவா? ஆன்மீகம் என்பது வெறும் வார்த்தை அல்ல. ஆன்மீகம் அறிவியலுடன் இணையும் பொழுதுதான் அதன் உன்னதம் உயர்வடைகின்றது. அறிவியலையும் ஆன்மீகத்தையும் இணைத்தே எங்கள் சமயம் தன்னை நிலைநிறுத்தி வருகிறது என்பதை மறுத்துவிட முடியாது. அந்த வகையில் மாசியில் வருகின்ற சிவராத்திரி மகா என்னும் உயர்நிலை எய்துவதற்கு உரிய காரணத்தை அறிவது அவசியம் அல்லவா ?

ஈத்தர் என்னும் சக்தி உலகத்தை இயக்குகிறது என்று அறிவியல் சொல்லுகிறது. இந்தச் சக்தியானது உலகம் முழுவதும், அண்டம் முழுவதும் நிறைந்தே இருக்கிறது. இந்தச் சக்தியானது பூமியை நோக்கி ஒவ்வொரு வினாடியும் வந்துகொண்டே இருக்கிறதாம்.

பூமியானது சூரியனை சிறிய நீள்வட்டப் பாதையிலும் பெரிய நீள்வட்டப் பதையிலுமாக இரண்டு பாதையில் சுற்றி வருகிறது. இவ்வாறு பூமி சுற்றி வரும்பொழுது பெரிய நீள்வட்டப் பாதையில் இருந்து சிறிய நீள்வட்டப் பாதைக்கு மாறுகின்ற நேரம்தான் மகாசிவராத்திரி வரும் நேரமாக அமைகிறது. ஈத்தர் சக்தியானது எப்பொழுதுமே பூமியை நோக்கி வந்துகொண்டே இருக்கிறது. ஒவ்வொரு மாதத்திலும் வரும் சிவராத்திரியில் ஈத்தர் சக்தியின் அளவு அதிகமாகவே இருக்கும். ஆனால் வருடத்தில் ஒருமுறை வரும் மாசி மாத சிவராத்திரியில் மட்டுமே ஈத்தர் சக்தியின் அளவு அபரிதமாக இருக்கும். இப்படி அபரிதமாக இம்மாதத்தில் வருடத்துக்கு ஒருமுறை அமைவதால் இக்காலத்து வருகின்ற சிவராத்திரியை மகாசிவராத்திரி என்று உயர்வுடன் போற்றும் நிலை ஏற்பட்டது என்பதை யாவரும் கருத்திருத்தல் அவசியமானதாகும் .

மாசிமாதத்தில் வருகின்ற ஈத்தருக்கு அதிக சக்தி காணப்படுகிறது. ஈத்தர் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி நகரும். பூமியானது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் சுற்றிக் கொண்டிருக்கும். எனவே நேரடியாக முழுச் சக்தியும் கிடைக்கும் நிலை இந்த மகா சிவராத்திரிக்கே வாய்க்கிறது.

மகாசிவராத்திரி அன்று விரதம் இருந்து கண் விழித்து முதுகை நேராக வைத்து தியானம் செய்யும் பொழுது ஈத்தர் உச்சந்தலையில் உள்ள சகஸ்ரார சக்கரத்தின் வழியாக பீனியல் கிளாண்ட் என்ற ஆனந்த சுரப்பி மூளையை அடைந்து பல வித நல்ல ஹார்மோன்களைச் சுரக்கச் செய்கிறது. இந்த நேரத்தில் நமக்கு நாமே ஆசீர்வாதம் **(Self Blessing)** செய்து கொள்ளும் பொழுது இது நமது டி.என்.ஏ.**( DNA )** இல் கெட்ட பதிவுகளை (கர்மா) அழிக்கும் வல்லமையை உருவாக்குகிறது.

ஈத்தர் சக்தி என்பது பகலிலும் உண்டு. இரவிலும் உண்டு. பகலில் சூரிய வெளிச்சம் காரணமாக சற்றுக் குறைவாகவே காணப்படும். ஆனால் இரவில் சூரிய வெளிச்சம் காணப்படாமையினால் ஈத்தர் சக்தியின் அளவு அதிகமாகவே இருக்கும்.

இரவு ஒன்பது மணி தொடக்கம் அதிகாலை இரண்டு மணிவரை உடலின் இயக்கமும் வித்தியாசமாய் இருக்கும். இவ்வேளை ஈத்தர் சக்தியின் அளவும் கூடுதலாகவே அமையும் நிலை காணப்படுவதால் இவ்வேளையிலே கட்டாயம் விழித்திருப்பது அவசியமாகிறது. எனவேதான் மகாசிவராத்திரியின் முக்கிய சாமமாக இந்த நேரம் எமது சமய ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

சிவன் என்றால் மங்களம் என்பது பொருளாகும். அந்த மங்களமான சிவனைக் குறிப்பதுதான் சிவராத்திரி. எம்மையெல்லாம் இயக்கிக் கொண்டிருக்கும் ஜீவனுக்கும் ஒரு பற்றுக்கோடு தேவையாகின்றது. அந்தப் பற்றுக்கோடாக விளங்கும் ஆற்றல்தனைத்தான் சிவன் என்கிறோம். இந்தச் சிவனை உருவமாய், அருவமாய், அருவுருவமாய் வழிபடுகிறோம். இது சிவ வழிபாட்டில் அமைந்திருக்கும் சிறப்பெனலாம்.

சிவனுக்கு உகந்த மந்திரமாய் பஞ்சாட்சரம் மந்திரம் விளங்குகின்றது என்று அருளாளர்கள் எடுத்து மொழிந்திருக்கிறார்கள். சம்பந்தர் தொடக்கம் மணிவாசகப் பெருமான், திருமூலர், அருணகிரிநாதர் வரை சொல்லி இருக்கிறார்கள். சைவசித்தாந்தமே நமச்சிவாய என்னும் நாமத்தைப் பெரிதும் போற்றி அதற்கெனப் பல தத்துவார்த் தங்களையெல்லாம் வெளிப்படுத்தி நிற்பதையும் காணமுடிகிறது எனலாம்.

(11ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir



"சிவனை அடைவதற்கும், சிவானுபவம் பெறுவதற்கும், சிவஞானமாவதற்கும், சிவமயமாவதற்கும் ஏற்ற விரதம் மகா சிவராத்திரியாகும். சிவனை அவனது எண் குணங்களோடும், ஐந்தொழில்களோடும், வேண்டத்தக்க வரங்களோடும் அனுபவிப்பதற்கு மிகவும் ஏற்புடைய விரதமே மகா சிவராத்திரியாகும்.

# சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கும் சிவராத்திரி

- கே.எஸ்.சிவஞானராஜா-

**"அப்பனை நந்தியை ஆரா அமுதினை**
**ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை**
**எப்பரிசாயினும் ஏத்துமின் - ஏத்தினால்**
**அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே"**

சீவன் சிவன் என்னும் தெளிவின் பிரகாரம் சிவனுக்கு உகந்த விரதமாக அனுஷ்டிக்கப்படுவது மகா சிவராத்திரி என்ற பெரும் விரதமாகும். "மகா" என்ற சொல்லில் அடங்கியிருக்கும் பிரம்மாண்டமே அந்த விரத மான்மியத்திற்கு வித்திடுகிறது. சிவம் உடம்பாகின்றது. சிவபெருமானே சைவப் பெருமக்களின் முழுமுதற் கடவுள். உலகம் முழுவதுமாக சிவமயமே என்று எண்ணியே சைவர்கள் தம் உடல், பொருள், ஆவி, உழைப்பு, உண்மை, உயர்வு, உணர்வு யாவற்றையும் எம்பெருமானாகிய சிவபெருமானுக் காக்கி உலக வாழ்வில் பேறடைகின்றார்கள்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், கமலை ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள், பழனி ஈசான சிவாசாரிய சுவாமிகள், தேவகோட்டை தற்புருஷ தேசிகர், திருச்சிராப்பள்ளி பட்டுசுவாமி ஓதுவார் யாவரும் உபதேசம் செய்தவாறு, இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது - நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும் என்பது. சிவனை அடைவதற்கும், சிவானுபவம் பெறுவதற்கும், சிவஞானமாவதற்கும், சிவமயமாவதற்கும் ஏற்ற விரதம் மகா சிவராத்திரியாகும். சிவனை அவனது எண் குணங்களோடும், ஐந்தொழில்களோடும், வேண்டத்தக்க வரங்களோடும் அனுபவிப்பதற்கு மிகவும் ஏற்புடைய விரதமே மகா சிவராத்திரியாகும். சிவனது எண்குணங்களான எட்டிலும் நாம் வசப்படவேண்டும். ஆகமப்படி

தன்வயத்தனாதல் முதலாக தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களிலிருந்தும் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை ஆகியனவற்றுடன், ஆருகத நூலின் பிரகாரம் ஈசன் குணங்களான எட்டு மாட்சியும் வரம்பில் ஞானம், வரம்பில் காட்சி, வரம்பில் இன்பம், வரம்பில் ஆற்றல், நாமம் இன்மை, கோத்திரமின்மை, ஆய்வின்மை, இடையூறின்மை ஆகியனவும் ஒருங்குசேர மகா சிவராத்திரி விரதம் தவமாகிறது.

இதுமட்டுமல்ல, இன்னும் சொல்வதானால் இருவகை அறத்தவரும், விண்ணோர்களும், முக்காலமும் இயம்புவோரும், முத்தமிழ் இசைப் போரும் முக்குணம் உடையவர்களும், மூவகைக் கொடையோர்களும், நால்வகை நிலத்தவரும், நால் வகை உபாயத்தவர்களுக்கும், ஐம் பெருங்குரவர்களும், ஐம்பெருங் குழுவினரும், ஐவகை இசைக் கலைஞர்களும் ஸ்தப மங்கையர்களும், அட்ட திக்குப்பாலகர்களும், நவரச நாயக நாயகிகளும், தசப் பருவ சீலசீலிகளும், அறுபத்துமூவர் நாயன்மார்களின் அடியார்களும், அறுபத்து நான்கு கலை விற்பன்னர்களும், பாமர மக்கள் குழாத்தினரும், வலுதேவைப்படுவோரும், ஆரோக்கியம் வேண்டுவோரும் எனப் பலவகை பக்த கோடிகளைப் பரோபகாரமாக்கும் அற்புத விரதம் மகா சிவராத்திரியாகும்.

இல்லற மான்மியம் உடையோர்களுக்கும், துறவறமான்மியம் உடையோர்களுக்கும் மகா சிவராத்திரி சிவப்பேறும் தவப்பேறும், யுகப் பேறுமளிக்கும்.

ஐவகைத் தந்தையர்கள் எனப்போற்றப்படும் பிறப்பித்தோன், கற்பித்தோன், மணம் முடித்தோன், அன்னம் தந்தோன், ஆபத்துக்குதவினோன் ஆகிய ஐவரும், ஐவகைத் தயார் எனப் போற்றப்படும் தெய்வசம் பத்துக்களாம். தன்னை ஈன்றாள், தேவியை ஈன்றான், அண்ணன் மனைவி, குருவின் மனைவி, அரசன் மனைவி ஆகிய ஐவரும், ஐம்பெருங்குழுவினர் என விஷேடிக்கப்டும் அரசர் குழாம், அமைச்சர் குழாம், புரோகிதர் குழாம், ஒற்றர் குழாம், தூதுவர் குழாம் ஆகிய ஐந்து குழாத்தினரும், தோற் கருவியாளர், துளைக் கருவியாளர், நரம்புக் கருவியாளர், கஞ்சக் கருவியாளர், மிடற்றுக் கருவியாளர் ஆகிய ஐவகை இசைக் கொடையாளர்களும் மகா சிவராத்திரி ஒப்புரவாளர்களாகத் தொண்டாற்றுகின்றார்கள்.

அநுட்டான ஆசார ஒழுக்கமே சிவராத்திரியின் ஆதார சுருதியாகும்.

நாவலர் இதனை ஏழாம் வயதிலேயே ஆரம்பிக்குமாறு கட்டளையிடுகின்றார். அது ஒருவரை இந்து சமயத்தவர் என்று அடையாளப்படுத்தி அகம் புறம் இரண்டையும் தூய்மைப்படுத்தும்.



சிவராத்திரியன்று ஒவ்வொரு அடியவரும் சிவ தீட்சை பெற்றவர்களாய் மிளிர வேண்டும். அதுவே சமய போதகமுமாகும்.

உமாபதி சிவாச்சாரியார், தத்துவப் பிரகாசர், அச்சுவேலிகுமாரசாமிப்குருக்கள், பழனி ஈசாச சிவாச்சாரியார், தேவ கோட்டை தற்புருஷ தேசிகர், திருச்சி பட்டு சுவாமி தேசிகர் ஆகியோர் மகா சிவராத்திரி முதலாக சகல விரதங்களுக்குமான சைவசாரம் பற்றி அழுத்தியும் அவசியம் பற்றியும் குறிப்பிடுகின்றனர். சிவராத்திரி அன்றைய தினமும் காலைக்கடன்கள், வீட்டுக் கடமை முடிந்து, ஸ்தானம் செய்து, சுத்தசலம் கொண்டு சிவ அனுட்டானம் செய்து, சுத்த சலம் கொண்டு சிவ அனுட்டானம் செய்து, பஞ்சாட்சர செபஞ்செய்து, மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களும் ஒன்றுபடுமாறு இயலுமானவரை விரதம் அனுட்டித்து, திருமுறைகள், புராணம் என்பவற்றை ஓதியும் கேட்டும் உணர்ந்தும் மௌனித்தும் சிவபிரானை பார்வதி சமேத காட்சியாகவும், சிவலிங்க வடிவாகவும் சோமாஸ்கந்த வடிவாகவும், தெட்சணாமூர்த்தியாகவும் வழிபாடாற்றுவது சாலவும் சிறப்பானதாகும்.

ஆற அமர இருந்து பக்தியோடு சிவபுராணம் ஓதுவது சிவபுண்ணியமாகும். சிவபுராணத்தினை நான்கு சாமங்களும் பயபக்தியோடு ஓதினால் இம்மைக்கும் மறுமைக்கும் பேரானந்தப் பெருவாழ்வு கிடைக்கும் என்பது அனுபவமாகும். உண்மையுமாகும். 95 வரிகளும் இனிப்பனவாய் கனியவைக்கும்.

**நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க**
**கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க**
**ஆகமம் ஆகிநின்றண்ணிப்பான் தாள் வாழ்க**
**ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க**

ஆம்! ஒவ்வொரு வீட்டிலும் சிவபுராணம் ஓதுவது பேரானந்தப் பெருவாழ்வு தரும் என நம்புவோம். வேண்டும் அயன்மாற்குக் காண்பதற்கு எட்டவொண்ணாத அரியோய் வடிவமாகச் சிவபிரான் ஒளிப் பிழம்பாக விஸ்வரூபம் கொள்கின்றார். சிவராத்திரி என்ற விரதம் நான்முகன் திருமால் அடிமுடி தேடிய வரலாற்றினை உணர்த்துவதாக அமைகிறது. நமக்கும் ஒரு சிறந்த பாடமாக அமைகிறது. ஆணவம் அடங்கிய தினம். சிவபெருமான் ஜோதிவடிவமாகக் காட்சியளித்து பிரம்மா விஷ்ணுவின் செருக்கினை அடக்கிய நாளே சிவராத்தரியாகும். ஒரு காலத்திலே பிரமனும் திருமாலும் யார் பெரியவர் என்று தர்க்கமும் போரும் நடைபெற்று மூவுலகமும் அமர்க்களமானது. படைத்தலா காத்தலா என்ற கர்வத்தால் எல்லாம் தவிடு பொடியாயிற்று. சிவபிரானுக்கும் உமாதேவியார் தீர்த்து வைக்குமாறு சிவபிரானை வேண்டிக் கொள்வவே, சிவபிரானும் பென்னாம் பெரிய ஜோதிப் பிளம்பாகத் தோன்றியப் பிரம்மிக்க வைத்தான்.

பிரம்மா ஜோதியின் முடியையும், விஷ்ணு ஜோதியின் அடியையும் முறையே அன்னமாகவும், பன்றியாகவும் தேடிக் காண முடியாதவராகிக் களைத்து விழுந்து சிவபிரானிடம் சரணடைய, ஒளிப்பிழம்பான ஜோதி வடிவம் ஒடுக்கி அடங்கி சிவலிங்கமாகியது. இத்தகு நன்னாளையே சிவராத்திரியெனக் கொண்டாடப்படுகிறது.

கங்கையின் பெருக்கை அடக்கியமை கண்ணப்பனின் அன்பின் எல்லையைக் கண்டமை, கருங்குருவி வலிமை பெற்றமை, காமனை எரித்தமை, காலனை உதைத்தமை, தண்ணீர்ப் பந்தர் வைத்தமை, நட்ட நடனம் புரிந்தமை, நரியைப் பரியாக்கிமை, பிறையை அணிந்தமை, புலித்தோல் அணிந்தமை, மண் சுமந்து அருளியமை, முப்புரம் எரித்தமை, வண்டோதரிக்குக் குழந்தையாகப் பிறந்தமை, வில்வம் இலைகள் லிங்கா மாலைகளாக அர்ச்சித்தமை ஆகிய இன்னோரன்ன அதிசயங்கள் யாவும் மகா சிவராத்திரியை அனுபவிப்பதற்காக அருளப்பட்டவையாகும்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் என்னும் திவ்விய ஷேத்திரத்திலேதான் சிவராத்திரிப் பெருவிழா மிகவும் நேர்த்தியாகவும், கீர்த்திகரமாகவும் அதி விசேடமாகவும் நடைபெறுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்த, புராதன வரலாற்றுப் பெருமையும், தேவாரப் பாடல்களினால் அதி அற்புதச் சிறப்பும் கொண்டதான சிவப்பேறும் கொண்டதனால் மகாசிவராத்திரி மாண்பு பெறுகிறது. வரம் கொழிக்கிறது.

மேலும், கேது இராமன், இராவணன் அனுமான் ஆகியோரால் பூஜிக்கப்பட்ட மேன்மையும் சல அசல சலாசல விக்கிரகங்களுக்கான வாலாயமும், பலாவி என்ற தீர்த்த விசேடமும் பொதிந்திருப்பதனாலும், அகத்திய முனிவர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் ஆகியோர் அருளிய பாசுரங்கள் அன்றும் இன்றும் என்றும் நிலைபெற்று நீட்சியும் மாட்சி பெற்றிருப்பதனாலும் மகா சிவராத்திரி விரதமும் அனுட்டிப்பும் நித்திரை விழிப்பும் முழிப்பும் களிப்பம் செழிப்பும் வரமும் வாரமும் பேரருள் பாலிக்கிறது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திர சதுக்கத்தில் இன்று சத்தியாக்கிரகம் போராட்டத்துக்கு தயாராகும் ஞானசார தேரர்

இஸ்லாமிய அடிப்படைவாதத்தாலும், கிறிஸ்தவ சபைகளின் அடிப்படைவாதத்தாலும் பௌத்த சமுதாயத்தின் இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. சிங்கள பௌத்தர்களின் உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு மகாநாயக்கதேரர்களுக்கு உண்டு.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைக்கும், பொதுபல சேனா அமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்ற பரிந்துரைக்கும் எதிர்ப்பு தெரிவித்து இன்று வியாழக்கிழமை சுதந்திர சதுக்கத்தில் பௌத்த துறவிகளை ஒன்றிணைத்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். இதற்கு மகாநாயக்க தேரர்கள் ஆதரவு வழங்க வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் அஸ்கிரிய பீடத்திடம் கோரிக்கை விடுத்தார்.

பௌத்த நாட்டில் பௌத்த அமைப்புக்கள் அடிப்படைவாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன என்ற தவறான நிலைப்பாட்டை ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான விசாரணை அறிக்கை தோற்றுவித்துள்ளது. இது தவறான செயற்பாடு என்பதை அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளோம். பௌத்த உரிமைகளைப் பாதுகாக்க அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றமை அவசியமாகும் என அஸ்கிரிய பீட அனுநாயக்கர் நாரம்பனாவே ஆனந்த தேரர் ஞானசார தேரரிடம் தெரிவித்தார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் கடந்த திங்கட்கிழமை கண்டி - அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்கர் நாரம்பனாவே ஆனந்த தேரருடன் பொதுபலசேனா அமைப்பினர் பேச்சுகளை முன்னெடுத்தார்கள்.

இந்தச் சந்திப்பின் போது ஞானசார தேரர் குறிப்பிட்டவை வருமாறு -

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் நாட்டில் வலுப்பெற்றுள்ள இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் தன்மையை வெளிப்படுத்தியது. இஸ்லாமிய அடிப்படைவாதம் குண்டுத்தாக்குதலுக்கு பின்னர் முற்றாக அழிவடையவில்லை. என்பதை குண்டுத் தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு வெளிப்படுத்தியது. முழுமையற்ற அறிக்கை தற்போது அரசியல் மற்றும் சமூக தளத்தின் பிரதான பேசு பொருளாகக் காணப்படுகிறது.

நாட்டில் வலுப்பெற்றுவந்த இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பாகப் பல முறை அரசாங்கத்துக்கு எடுத்துரைத்தோம். இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பாகப் பேசும் தருணத்தில் நாங்கள் இனவாதிகளாக அரசியல் தலைவர்களால் சித்திரிக்கப்பட்டு துரதிஷ்டவசமாக ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. குண்டுத்தாக்குதலின் உண்மைக் காரணிகளைக் கண்டறிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமித்தார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகியுள்ளது. குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் எவ்வித புதிய காரணிகளும், இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கும் பொறிமுறைகளும் குறிப்பிடப்படவில்லை. மாறாக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நானும் (ஞானசார தேரர்) பொதுபல சேனா அமைப்பினரும், ஒரு சில பாதுகாப்பு அதிகாரிகளும் குண்டுத்தாக்குதலின் பொறுப்புதாரிகளாக சித்திரிக்கப்பட்டுள்ளோம்.

இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டிய தேவை பொதுபல சேனா அமைப்பிற்கு கிடையாது. பௌத்த மதத்துக்கும், பௌத்த சமூகத்துக்கும் பாதிப்பு ஏற்படும் போது அதற்கு எதிராக செயற்பட்டுள்ளோம். இதனை இனவாதம் என்று குறிப்பிட முடியாது. பௌத்த மதத்தின் உரிமைகளைப் பாதுகாப்பது காவி உடை தரித்த தேரர்களின் தலையாய கடமையாகும்.

இஸ்லாமிய அடிப்படைவாதமும், கிறிஸ்தவ சபைகளின் அடிப்படைவாதமும் பௌத்த மதத்திற்கும், பௌத்த சமூகத்துக்கும் பாரிய நெருக்கடியாகவே காணப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பில் அரசியல்வாதிகள் எவ்வித அக்கறையும் கொண்டவர்கள் அல்லர். பௌத்த சமூகத்தின் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படும் போது மகாநாயக்க தேரர்கள் குரல் கொடுத்துள்ளார்கள். விசாரணை அறிக்கையால் பௌத்த அமைப்புகளுக்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. ஆகவே இந்த விடயம் தொடர்பாக மகாநாயக்க தேரர்கள் ஒன்றிணைந்து ஆதரவு வழங்க வேண்டும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் பௌத்த அமைப்புக்கள் தடை செய்யப்பட வேண்டும் என்ற பரிந்துரைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று சுதந்திர சதுக்கத்தில் பௌத்த மதத் தலைவர்களை ஒன்றிணைத்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். இதற்கு மகாநாயக்க தேரர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.என்றார.



அஸ்கிரிய பீட அனுநாயக்கர் நாரம்பனாவே ஆனந்த தேரர் தெரிவித்தவை-

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையற்றது என்பதை அரசாங்கத்துக்கு உத்தியோக பூர்வமாக தெரிவிக்கவேண்டும். பௌத்த மத உரிமைகளையும், பௌத்த அமைப்புக்களையும் பாதுகாக்க அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றமை அவசியமாகும்.

பௌத்த நாட்டில் பௌத்த அமைப்புக்கள் அடிப்படைவாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்கிறது என்ற தவறான நிலைப்பாட்டை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. இது முற்றிலும் தவறானது. தவறை திருத்திக் கொண்டு குண்டுத்தாக்குதலின் உண்மைக் காரணியை வெளிப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளோம். - என்றார்.

# பெண்கள் அவதானம் தேவை பொலிஸார் எச்சரிக்கை விடுப்பு

திட்டமிட்டு கொள்ளையடிக்கும் குழுவினரால் அல்லது போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களால் தங்க சங்கிலிகள் கொள்ளையிடும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இவ்வாறு 3 பகுதிகளில் தங்க சங்கிலி கொள்ளை சம்பவங்கள் பதிவாகியுள்ளன என பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண கூறினார்.

அபராதுவ, கட்டுநாயக்க மற்றும் கோமரங்கடவல ஆகிய பிரதேசங்களிலேயே இவ்வாறு தங்க சங்கிலிகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இவ்வாறான சந்தேகநபர்கள் கடைகளுக்கருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்துவதைப் போன்றும், யாருக்காக வேனும் காத்திருப்பதைப் போன்றும், பஸ் தரிப்பிடங்களிலும் அல்லது தம்மைப் பொலிஸார் என அடையாளப்படுத்தியும் கொள்ளையடிக்கின்றனர்.



எனவே தனியாக வீதிகளில் செல்லும் பெண்களும், சன நடமாட்டம் குறைவான பிரதேசத்தில் செல்லும் பெண்களும் இந்த விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். - என்றார்.

# துப்பாக்கி, போதைப் பொருளுடன் மாளிகாவத்தையில் ஒருவர் கைது!

மாளிகாவத்தை பிரதேசத்தில் துப்பாக்கி, ஹெரோயின், ஐஸ் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை 34 வயதுடைய குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 38 மில்லி மீற்றர ரக துப்பாக்கி, அதற்கு பயன்படுத்தக் கூடிய துப்பாக்கி ரவைகள் 4, ஹெரோயின் 2 கிராம், ஐஸ் போதைப்பொருள் 10 கிராம், கஞ்சா 10 கிராம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர் என்று தெரியவந்துள்ளது. இவர் தொடர்பில் மாளிகாவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பொலிஸாரால் போதைப் பொருள் தொடர்பிலான சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

போதைப்பொருளற்ற இலங்கையை கட்டியெழுப்புவதற்கு பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்கமுடியும்.

1997 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தகவல்களை வழங்குவதன் ஊடாக பொது மக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்புக்களை வழங்கமுடியும்.

இதேபோன்று மரங்களை வெட்டுதல், சுற்றாடலை மாசுபடுத்துதல் தொடர்பிலும் பொலிஸார் தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றனர்.



இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவை தொடர்பிலும் பொது மக்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்க முடியும். - என்றார்.

# சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்தவர் குற்றத்தடுப்பினரால் சாவகச்சேரியில் கைது!



சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்திசெய்து விற்பனை செய்து வந்த நபர் ஒருவர் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்திசெய்து மாவட்டத்தின் பல பாகங்களுக்கும் விநியோகம் செய்தார் என மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரிற்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மேற்படி பகுதியை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சப் இன்ஸ்பெக்டர் மேனன் தலை மையிலான குழுவினர் சுற்றிவளைத்தனர்.

இதன்போது உற்பத்தியில் ஈடுபட்டுவந்த மட்டுவிலைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 3 பரல் கசிப்பு கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

**நாற்று மேடை தொற்று நீக்கம்**

**எரித்தல்**
- மேடையை ஈரமாக்கல்
- 5cm இற்கு வைக்கோல் படையிடல்
- 5cm இற்கு உமியிடல்
- காற்றுவீசும் திசைக்கு எதிர்திசையில் எரித்தல்

**இரசாயன முறை**

30 கிராம் திராம் அல்லது கப்டான் அல்லது ஹேமாய் பங்கசு நாசினியை 15 லீற்றர் நீரில் கரைத்து பாத்தி காய்ந்திருக்கும் வேளையில் பாத்திக்கு ஊற்றுதல் வேண்டும்

**பொலுத்தீனால் மூடல்**
- மேடையை ஈரமாக்கல்
- ஒளி புகவிடும் பொலுத்தீனால் மூடல்
- 5cm இடைவெளி விட்டு மூடல்
- 2 வாரம் வரை மூடல்

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர்
Kalaikkathir

# கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ரி.ஐ.டி. விசாரணைக்கு அழைப்பு



## எதிர்த்து சபையில் புதன் போராட்டம்; கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றம்

**கரைச்சி பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் நாகேந்திரம் செல்வநாயகத்தைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைக்கு அழைத்தமையைக் கண்டித்து பிரதேச சபை அமர்வில் அமைதிவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

**கரைச்சி பிரதேச சபை அமர்வு இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமானபோதே சபையின் உறுப்பினர்களால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

யாரையும் விசாரணைக்கு உட்படுத்துவதற்குத் தாம் தடையாக இல்லை எனவும், அவ்வாறு விசாரணைக்கு உட்படுத்துவதாயின் கிளிநொச்சி மாவட்டத்திலேயே விசாரணை செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து குறித்த போராட்டத்தை முன்னெடுப்பதற்காக சபை உறுப்பினர் ஜீவராசா சபையிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்ட நிலையில் அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்ததை அடுத்து சபை 5 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினரான நாகேந்திரம் செல்வநாயகம் இன்று கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார் எனவும், குறித்த செயற்பாடானது மக்கள் பிரதிநிதிகளை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது எனவும் தெரிவித்து இன்றைய அமர்வில் பிரேரணையும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

குறித்த பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இன்று குறித்த பிரதேச சபை உறுப்பினர் விசேட விடுமுறை பெற்று விசாரணைகளுக்காகச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2024 ஜனாதிபதித் தேர்தலில் ஆளுங்கட்சி வேட்பாளர் யார்?

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு மேலான காலப்பகுதி எஞ்சியிருந்தாலும், பிரதான அரசியல் கட்சிகள் அந்தத் தேர்தல் தொடர்பிலும் தமது பார்வையை செலுத்தியுள்ளன. குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, பரந்துபட்ட கூட்டணி அமைத்து களமிறங்கினாலும் வேட்பாளர் சஜித் பிரேமதாஸதான் என உறுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஆளுங்கட்சியின் வேட்பாளர் யார் என்பது தொடர்பில்தான் பல கோணங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அரசமைப்பின் பிரகாரம் நபரொருவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை இரு தடவைகள் வகிக்கலாம். அந்தவகையில் 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தற்போதைய ஜனாதிபதிக்கு வாய்ப்பு இருந்தாலும், அவர் போட்டியிடமாட்டார் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

பங்காளிக்கட்சி தலைவர்கள் சிலருடன் அண்மையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலொன்றின் போது, அடுத்த தேர்தலில் தான் போட்டியிடமாட்டார் எனவும், பொருத்தமான வேட்பாளர் ஒருவரை தயார்படுத்துமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார் எனவும் கொழும்பு அரசியல் களத்தில் பரபரப்பாக பேசப்படுகின்றது.

இலங்கை அரசியலில் புரட்சியை ஏற்படுத்தி புதியதொரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இலக்காக இருக்கின்றது. எனினும், அதனை நோக்கி பயணிப்பதற்கு பல தடைகள் இருப்பதாலும், மேலும் சில காரணங்களாலுமே ஜனாதிபதி இவ்வாறான தொரு அறிவிப்பை விடுத்திருக்கக்கூடும் என ஊடகம் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ களமிறங்காவிட்டால், பஸில் ராஜபக்ஷவே போட்டியிடுவார் எனவும் கூறப்படுகின்றது. எனினும், புதிய அரசமைப்பின் ஊடாக எத்தகைய மாற்றங்கள் ஏற்படும் என்பதனை அடிப்படையாகக்கொண்டே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆளுங்கட்சியில் இறுதி முடிவு எடுக்கப்படக்கூடும்.

# காரைநகர்க்கடலில் படகில் இருவர் 141 கிலோ கஞ்சாவுடன் சிக்கினர்!



(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,மார்.10



இந்தியாவில் இருந்து எடுத்து வரப்பட்டிருக்கலாம் என நம்பப்படும் 141 கிலோ கேரளக் கஞ்சாவுடன் இருவர் காரைநகரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் கடற்பரப்பில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய படகினை சோதனை செய்த கடற்படையினர் அதில் 141 கிலோ கஞ்சா பொதிகள் இருப்பதை அவதானித்து இருவரையும் கைது செய்தமையோடு கஞ்சாவையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கஞ்சா பொதிகளுடன் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இதேநேரம் இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# 20க்கும் அதிகமானோருக்கு யாழில் இன்றும் கொரோனா

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,மார்.10

வடக்கில் இன்றும் இருபதுக்கும் மேற்பட்டவர்களிற்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் இன்று 300 இற்கும் மேற்பட்டோருக்கு பி.சி.ஆர். கொரோனாப் பரிசோதனை இடம்பெற்றது. இதிலேயே 20ற்கும் மேற்பட்டவர்களிற்கு கொரோனாத் தொற்று இனம் காணப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தில் கொரோனாத் தொற்று இனம் காணப்பட்ட உத்தியோகத்தரின் குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கும் இன்று தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

# இரு மன்னார் மீனவர்கள் தனுஷ்கோடியில் கைது!

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,மார்.11

இந்திய எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாகத் தெரிவித்து மன்னாரைச் சேர்ந்த இரு மீனவர்கள் இந்தியக் கரையோர காவல்படையினரால் இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் பதிவுள்ள 3770 இலக்கமுடைய படகில் பயணித்த இருவர் மீன் பிடித்தபோது எல்லை தாண்டி தனுஷ்கோடி பகுதிக்குள் நுழைந்தனர் என்ற குற்றச் சாட்டிலேயே இந்த இலங்கை மீனவர்கள் இரண்டு பேரையும் இந்திய கடலோர காவல் படையினர் கைது செய்து தற்போது தீவிர விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

கடலோர காவல் படையினரால் மேற் கொள்ளப்படும் விசாரணையைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட



இரு மன்னார் மீனவர்களும் மரைன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டம், பேசாலை 8 ஆம்வட்டாரத்தைச் சேர்ந்த அருள் குரூஸ் மற்றும் ரேகன் பாய்வா ஆகியோரே கைது செய்யப்பட்ட இருவருமாவர்.

# ஜே.சி.பி. - மோ.சைக்கிள் விபத்து கிளிநொச்சியில் ஒருவர் உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,மார்.10



கிளிநொச்சியில் ஜே.சி.பி. வாகனம் - மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தரும்புரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி தரும்புரம் 7ஆம் யுனிட் பகுதியில் இன்று பிற்பகல் நடந்த இந்த விபத்தில் அதிசயவிநாயகர் கோவிலடி, விஸ் வமடுவைச் சேர்ந்த குணராசா - ஜெனோசன் (வயது 20) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் உயிரிழந்தார் என்று பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஆனந்தசங்கரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டுவதற்கான கோரிக்கை' என்ற தலைப்பில் கடந்த 3 ஆம் திகதியிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ள அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு:-

எமது கட்சியின் பொதுச்சபை கூட்டத்தை கூட்டுமாறு 17.08.2020 அன்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்தின் பொதுச் சபை உறுப்பினர்கள் கொடுத்த கோரிக்கையையும், அதே போல் 21.09.2020, 16.10.2020 கடித மூலமாகவும், 12.02.2021 அன்று நேரடியாகவும் கட்சியின் தலைமைச் செயலகம் சென்று நிர்வாகச் செயலாளர் திரு. இரா.சங்கையா அவர்களிடம் பொதுச் சபை கூட்டத்தை கூட்டுமாறு கோரிக்கையை விடுத்திருந்தும் இன்று வரை எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது மிகுந்த மனவேதனைக்குரிய விடயமாகும். இறுதியாக 24.02.2019 அன்றுடன் கட்சியின் யாப்பு விதிகளுக்கமைவாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாக உத்தியோகத்தர்களின் பதவிக்காலம் 24.02.2021 அன்றுடன் காலாவதியாகி உள்ளது என்பதனையும் தங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றோம்.

தற்போது உள்ள (கொரோனா) கொவிட் - 19 ஏற்பட்ட நெருக்கடியான காலகட்டமாக இருப்பினும் தற்பொழுது 150 நபர்களுடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நிகழ்வுகள் நடத்துவதற்கு அனுமதி உண்டு. ஆகவே கொவிற்றைக் காரணம் காட்டி காலத்தை இழுத்தடிப்பதை தவிர்த்து, கட்சியின் நலன்கருதி இக் கடித திகதியில் இருந்து 14 நாள்களுக்குள் கூட்டத்தைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கட்சியின் உறுப்பினர்களால் பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும் அதற்கு செவிமடுக்காது, கட்சியோடு சம்பந்தம் இல்லாத, கட்சி உறுப்பினர்கள் அல்லாத, எமது இனத்திற்கு விரோதமாக செயற்படுபவர்களின் கோரிக்கைக்கு அமைவாக ஏதோ ஒரு உள் நோக்கத்துடன் 28.01.2021 அன்று கிளிநொச்சியிலும், 20.02.2021 யாழ்ப்பாணம் அரியாலையிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியோடு தொடர்பில்லாதவர்களை அழைத்து கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றீர்கள். அது மாத்திரமல்ல, வடக்கு, கிழக்கு ஏனைய பிரதேசங்களிலும் இவ்வாறான கூட்டங்களை நடத்த நீங்கள் திட்டமிட்டுள்ளீர்கள் என நம்பத்தகுந்த வட்டாரங்களிடம் இருந்து தகவல்கள் வெளியாகி உள்ளது.

இந்தச் செயல் மூலம் கட்சியின் பொதுச் சபையினதோ அல்லது கட்சியின் மத்திய செயற்குழுவினதோ அங்கீகாரமோ அனுமதியோ பெறப்படாமல் உங்களது விருப்பத்திற்கோ அல்லது கட்சியின் அங்கத்தவர்கள் அல்லாதவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவோ கட்சியின் விதிமுறைகளுக்கு முரணாகவும் செயற்பட்டு வருகின்றீர்கள். இந்தச் செயலானது ஜனநாயகத்திற்கு முரணானது என்பதனையும் உங்களது தனிப்பட்ட நலனின் அடிப்படையில் சர்வாதிகார போக்கை கடைப்பிடித்து அதிகார துஷ்பிரயோகம் செய்வதாகவே அமைகின்றது.

எனவே இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தி, தந்தை செல்வாவின் வழியில் ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து, கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்களின் கோரிக்கையின் அடிப்படையில் கட்சியின் அமைப்பு விதிகள் கோவை விதி 11:10 அமைவாக பொதுச்சபை கூட்டத்தை 14 நாள்களுக்குள் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் ஒரு தடவை வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றோம். இக் கடிதம் கிடைத்து 14 நாள்களுக்குள் பொதுச் சபைக் கூட்டத்தை கூட்டுவதற்கு தவறுவீர்களேயானால் உங்களது அதிகார துஷ்பிரயோகத்திற்கு எதிராக வேறுவழியின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மனவருத்தத்துடன் இக் கடித மூலம் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். - என்று உள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களான பின்வரும் பத்துப் பேர் அதில் ஒப்பமிட்டுள்ளனர்:-

1. ச.அரவிந்தன் (சிரேஷ்ட துணைத் தலைவர்)
2. தங்க.முகுந்தன் (முன்னாள் மாநகர சபை உறுப்பினர்)
3. க.யோகராஜா (இணைப்பொருளாளர்)
4. ந.மதியழகராசா (இளைஞர் அணிச் செயலாளர்)
5. கே.ஜி.சிவரூபன் (இளைஞர் அணி செயலாளர்)
6. சா.தங்கராசா (முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்)
7. சு.பத்மநாதன் (பிரதேச சபை உறுப்பினர்)
8. ம.கருணாநிதி (முன்னாள் மாநகர சபை உறுப்பினர்)
9. ச.சத்தியப்பிரபா (மகளிர் அணி செயலாளர்)
10. ம.சத்தியநாதன் (முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்.

## ரூ.30 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யுவான்கள் (154 கோடி அமெரிக்க டொலர்கள்) - அல்லது சுமார் 30 ஆயிரம் கோடி ரூபா - உதவி கடனாக வழங்க சீனா முன்வந்துள்ளது.

சுமார் 6 வீத வட்டியில் வழங்கப்படும் இக்கடன் இலங்கை தற்போதைய நிதி நெருக்கடியில் இருந்து வெளியே வர உதவும் என கூறப்படுகின்றது.

## 13ஆவது நாளாகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கை மீது சர்வதேச குற்றவியல் விசாரணையைக் கோரி இலண்டனில் வசித்து வரும் பெண் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் 13 ஆவது நாளாகவும் இன்று தொடர்கின்றது.

உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து ஒவ்வொருவரிடமும் ஏற்பட்டுள்ள விடுதலை உணர்வின் பின்னால் மாவீரர்கள் உள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது எனவும் அம்பிகை செல்வகுமார் கூறியுள்ளார்.

தமது கோரிக்கைகள் பிரிட்டன் நாடாளுமன்றம் வரை ஒலிப்பதற்கு அனைவரது போராட்டமும் காரணமாக அமைந்தது எனவும், ஒருவரது போராட்டத்தால் இந்த உலகம் திரும்பிப் பார்க்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த உலகில் இறுதித் தமிழன் இருக்கும் வரை உண்மைக்கும் நீதிக்குமான போராட்டம் தொடரும் என்றும் அம்பிகை செல்வகுமார் மேலும் தெரிவித்துள்ளார்.

## 'ஈஸ்டர் தாக்குதல்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையையும், அதிலுள்ள பரிந்துரைகளையும் எதிரணியிலுள்ள பலரும் கண்டபடி விமர்சிக்கின்றனர். இந்த விசாரணை ஆணைக்குழுவை தற்போதைய ஜனாதிபதி நியமிக்கவில்லை. அதை முன்னாள் ஜனாதிபதிதான் நியமித்திருந்தார் என்பதை விமர்சனங்களை வெளியிடுவோர் கவனத்தில்கொள்ள வேண்டும்.

யாரையும் பழிவாங்குவதும், பாதுகாப்பதும் அரசின் நோக்கமல்ல. ஆனால், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது.

அதேவேளை, விசாரணை அறிக்கையில் உள்ள அனைத்துப் பரிந்துரைகளையும் அமுல்படுத்தவும் முடியாது. ஏனெனில் சில குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்கள் இல்லை.

எனவே, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் எவற்றை நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் ஜனாதிபதியின் புதிய ஆணைக்குழுதான் இறுதி முடிவெடுக்கும் - என்றார்.

# நீதிமன்றத்தில் சரணடைந்த ஹிருணிகாவுக்குப் பிணை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று சரணடைந்ததை அடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இளைஞர் ஒருவரைக் கடத்த முயற்சித்த வழக்கில் விசாரணைக்கு நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தால் அவரைக் கைதுசெய்ய நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தது.

நீதிமன்ற வளாகத்தில் தனது ஒன்றரை மாதக் குழந்தைக்கு உணவளித்து விட்டுவருவதற்கு தாமதமானதால் சரியான நேரத்தில் ஹிருணிகா ஆஜராகத் தவறிவிட்டார் என்று சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

அத்தோடு உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியமைக்காக ஹிருணிகா பிரேமச்சந்திர நீதிமன்றிடம் மன்னிப்பும் கோரியிருந்தார்.

இதையடுத்து பிணை நிபந்தனையின் அடிப்படையில் ஹிருணிகா பிரேமச்சந்திர விடுவிக்கப்பட்டார்.

## சித்தமலம் அறிவித்து....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பேறாக, தவப்பேறு சிவப்பேறு, ஆயுட்பேறு, கல்விப்பேறு, சந்தானப்பேறு, சந்தோஷப்பேறு, சகவாழ்வுப்பேறு, சகோதரப்பேறு சத்தாயப்பேறு, சாத்தியப்பேறு என யாவும் சித்திக்கும். அல்லாமலும் பாலாவியில் இயற்கையாகவே உடல் உளத்தில் பீடித்துள்ள மலநோய்களுக்கான மருத்துவம் ஊடுற்றெடுக்கிறது.

"வெய்ய வினையாய அடியார் மேல் ஒழித்தருளி

வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்

பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்

செய்யசடை முடியான் திருக்கேதீச்சரத் தானே"

என்பது சுந்தரருடைய தேவாரமாகும்.

சிவராத்திரியன்று பாலாவியில் தீர்த்தம் எடுத்து குடங்களில் சுமந்தவாறு புராதனமான மகாலிங்கத்திற்குத் தீர்த்தக்காவடி எடுத்து தீர்த்தாபிஷேகம் செய்வது மானிட வாழ்வின் மகத்தான பேறாகக் கருதப்படுகிறது.

நான்கு சாமப் பூஜைகளிலே முதலாம் சாமம் 108 கலச கும்ப, பஞ்ச கவ்விய, பயற்றன்ன வில்வ வழிபாடு மிகவும் பக்திபூர்வமானது. இரண்டாம் சாமம் 49 கலச பஞ்சாமிர்த, பாயாசன்ன, தாமரை வழிபாடும், மூன்றாம் சாமம் 27 கலசதேன், பாலன்னம், சாதிப்பூ, வழிபாடும், நான்காம் சாமம் 17 கலச கருப்பஞ்சாறு திரவியம், சுத்த அன்ன நந்தியாவர்த்த வழிபாடும் பேரானந்த வாழ்வு தரக் கூடியவையாகும். இடர் களைவதற்கு ஏற்ற விரதமாகும். இவ்விரதம் கொடிய நோய், துன்பம், போதை, பயம், அச்சுறுத்தல், அடாவடி, கொலை, களவு, ஊழல் யாவற்றிலிருந்து நாட்டையும், வீட்டையும் காப்பற்ற வல்ல ஒன்றெனத் திடமாக நம்பலாம். கொரோனா வராதபடி பிரார்த்திப்போம். இலங்கையில் சைவ ஆலயங்களில் மகா சிவராத்திரி விரதம் உள்ளன்போடும் பயபக்தியோடும் அனுஷ்டிக்கப்படுவதன் பேறாக நாடு சுபீட்சமடையும் என நம்பலாம்.

**ஓம் நமசிவாய சிவாய நம ஓம்.**

## இருத்துவோம் சிவ...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேதம் நான்கினும் மெய் பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே
நற்ற வாவுனை நான்ம றக்கினும்
சொல்லும் நாநமச்சி வாயவே

நமச்சிவாய வாழ்க இந்த வார்த்தை சிவனைக்குறிக்கும் சக்திமிக்க வார்த்தையாகும்.

நமசிவாய என்பதற்கு - சிவனை வணங்குகிறேன் என்பது அர்த்தமாகும். இந்த மந்திரத்தை உச்சரித்து வந்தால் வாழ்வில் நலம் பெருகும். மனம் வெளிக்கும். சிவனின் அருள் என்றுமே துணையாகிநிற்கும்,

ந - என்றால் திருவடி
ம - என்றால் திரு உந்தி
சி - என்றால் திருத்தோள்கள்
வா - என்றால் திருமுகம்
ய - என்றால் திருமுடி

இதுதான் நமசிவாய என்பதன் பொருளாகி சிவப்பரம்பொருளை நினைவூட்டி நிற்பதாகும். இம்மந்திரதை உச்சரித்தால் உலக இன்பங்கள் கிடைக்கும். நலம் பெருகும். ஞான மார்க்கத்தின் முதற்படிக்கு எம்மையெல்லாம் இட்டுச் செல்லும். ஆகவேதான் அடியார்கள் இம்மந்திரத்தை உயிரெனப் போற்றினார்கள் என்பதை மனமிருத்தல் அவசியமாகும். சிவராத்திரியில் இந்தச் சக்திமிக்க, சித்திவழங்கும் நமச்சிவாய என்னும் நாமத்தை மறவாமல் மனமார நினைந்து வாயாலே உச்சரித்தால் நிச்சயம் பரம்பொருளான அந்தச் சிவனின் அருள் கிட்டுவதோடு எமது அழுக்கான மனமெல்லாம் அழுக்ககன்று ஆண்டவனின் நினைப்பு நிச்சயம் அமரும் என்பதை அனைவரும் அகமிருத்துவோம்.

எமது சமயம் நல்ல நம்பிக்கைகளின் அடிப்படை யில் அமைந்த சமயமாகும். ஒவ்வொரு செயலுக்கும் சிறப்பான காரண காரியங்கள் இருக்கின்றன. அவற்றை சரியான முறையில் விளங்கிக் கொண்டு விட்டோமா னால் மனதில் ஐயம் என்பது அகன்றே ஓடிவிடும். ஐயந் தெளிதல் வேண்டும். ஐயம் தெளிந்தால் ஆண்டவன் அருளும் எமக்கு வாய்த்துவிடும். சிந்தையினை தெளிவாக்கல் சிவன் அருள் பெற வழியாகும். சிவராத்திரி நன்னாளில் சிந்தையைத் திருத்திட சிவனை வேண்டுவது எமது தலையாய பணியாகும்.

## போர்க்குற்றம் செய்ய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்ததாவது:-

இலங்கையில் இறுதிப்போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரம் கிடைக்க வேண்டும் என்பதும் எமது வேண்டுகோளாகும்.

இதை நாம், 2009இல் போர் நிறைவுக்கு வந்தது தொடக்கம் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

இலங்கை மீதான ஐ.நா. தீர்மானங்களும் இதையே வலியுறுத்தி நிற்கின்றன. ஆனால், அரசுதான் ஐ.நாவின் பரிந்துரைகளை நிறைவேற்றாமல் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றது.

இராணுவத்தினர் போர்க்குற்றங்களை இழைக்கவில்லையெனில் அவர்களும், அரசதரப்பினரும் அது தொடர்பான விசாரணைக்கு அஞ்சுவது ஏன்?

யார் குற்றம் செய்திருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். யார் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்குப் பரிகாரம் கிடைக்க வேண்டும். இதுதான் சர்வதேச நியதி. இதை மீறி எவரும் செயற்பட முடியாது.

சர்வதேசத்தைப் புறந்தள்ளி இந்த அரசு செயற்படுமானால் நாடுதான் பேராபத்தைச் சந்திக்கும் - என்றார்.

## இராணுவத்தினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சர்வதேசத்துக்குக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

- இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஊடகங்களிடம் தெரிவித்தார்.

என் மீதான அமெரிக்காவின் பயணத் தடை திட்டமிட்ட சதி நடவடிக்கையாகும். இதன் பின்னணியில் புலம்பெயர் அமைப்புக்கள் செயற்படுகின்றன எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

முன்னாள் இராணுவத் தளபதியும் பிரேசிலுக்கான முன்னாள் தூதுவருமான ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக வெளிநாடுகளில் வேண்டுமென்றே போர்க்குற்றச்சாட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இதன்பின்னணியிலும் புலம்பெயர் அமைப்புக்கள் இருக்கின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பிறந்த குழந்தையைப் பார்ப்பதற்கு ஆண்கள் வார்ட் சென்றவர் ஹக்கீம்!

## மஹிந்தானந்த சபையில் கிண்டல்

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் குழுவினர், கடந்த ஆட்சியில் இருந்தவர்களின் தேர்தல் நடவடிக்கைகளுக்கும் உதவி செய்தனர் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த விவாதத்தில் மஹிந்தானந்த அளுத்கமகே மேலும் கூறியுள்ளவை வருமாறு -

சம்பவமொன்றில் காயமடைந்த சஹ்ரான் குழுவைச் சேர்ந்த ஒருவரை பார்ப்பதற்கு வைத்தியசாலைக்கு ஹக்கீம் சென்றிருந்தார்.

அந்த விவகாரம் தொடர்பில் தகவல்கள் கிடைத்தவுடன், அவரிடம் குற்றப்புலனாய்வு பிரிவு விசாரணை நடத்தினர். இதன்போது பிறந்த குழந்தையொன்றைப் பார்ப்பதற்காகவே சென்றார் என அவர் பதிலளித்துள்ளார்.

இவ்வாறு, ஹக்கீம் மாத்திரம்தான் புதிதாய் பிறந்த குழந்தையைப் பார்ப்பதற்கு ஆண்கள் வாட்டுக்குச் சென்ற ஒருவராவார்.

மேலும் சஹ்ரானுடன் இணைந்து செயற்பட்டவர்களுடன் தேர்தலின் போது வாக்குகள் கேட்பது மாத்திரம் கடந்த ஆட்சியாளர்களை பொறுத்த வரை சரியான விடயமாக இருக்கின்றது.

இதேவேளை ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஒருவரை ஒருவர் கை நீட்டுவதால் எந்தவொரு பயனுமில்லை. இந்த தாக்குதல் இடம்பெற்றமைக்காக காரணம் தொடர்பாக முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

இத்தகைய தாக்குதல் இடம்பெற்றமைக்கு முக்கிய காரணம், கடந்த அரசாங்கத்தில் நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து இருக்காமையே ஆகும். இதனை நீங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

கிரியெல்ல, சம்பிக்க, சஜித், ரஞ்சித் பண்டார, கயந்த, பொன்சேகா உள்ளிட்ட அனைவரும் நாடாளுமன்றத்தில் தற்போது அங்கம் வகித்துள்ளார்கள்.

நீங்கள் அனைவரும் கடந்த ஆட்சியில் நாட்டின் பாதுகாப்பு விவகாரத்துக்கு முன்னுரிமை வழங்கவில்லை. மாறாக தங்களது அமைப்புக்கே முன்னுரிமை வழங்கினீர்கள்.

பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்ட பதவிகளை பெறுவது எவ்வாறு என்பது தொடர்பாக அதிக கவனம் செலுத்தினீர்கள். நாட்டின் பாதுகாப்பு குறித்து கவனத்தில் கொள்ளவில்லை.

இதேவேளை மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் நாட்டின் பாதுகாப்புக்கே அதிக முன்னுரிமை வழங்கி வருகின்றனர்.

அதாவது, நாட்டின் பாதுகாப்பு பலமிக்கதாக காணப்பட்டால்தான் சிறந்த முறையில் முன்னோக்கி நாட்டை கொண்டு செல்ல முடியும்.

கடந்த ஆட்சியில், மங்கள சமரவீர, ஐ.நா. மனித உரிமை பேரவையில் இராணுவத்தினருக்கு எதிரான பிரேரணைக்கு இணை அனுசரணை இலங்கை வழங்குவதாக ஆதரவு வழங்கி இருந்தார்

இவ்வாறு கடந்த ஆட்சியின் செயற்பாடுகள் பல, நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவனவாகவே அமைந்திருந்தன. எனவே ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தில் ஒரு சிலரை மாத்திரம் குற்றம் சுமத்த முடியாது. அப்போது ஆட்சியில் இருந்த அனைவருமே பொறுப்புக் கூற வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# விமலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

## தயாராகிறார் ரிஷாத்



ஈஸ்டர்தாக்குதல்சூத்திரதாரிசஹ்ரானையும் தன்னையும் தொடர்புபடுத்தி, அமைச்சர் விமல் வீரவன்ஸ வேண்டுமென்றே பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகிறார் என ரிஷாத் பதியுதீன் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாகநேற்று (புதன்கிழமை) குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார் எனவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கூறினார்.

அதன்படி அவரிடம் விசாரணை செய்து, உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு சி.ஐ.டியினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் வெளிவந்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும், தனக்கும் இந்த தாக்குதல் சம்பவத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் ரிஷாத் பதியுதீன் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் தனது அரசியல் இருப்புக்காக இவ்வாறு அப்பட்டமான பொய்யைக் கூறும் விமலுக்கு எதிராக சட்டத்தரணி ஊடாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராகி வருவதாகவும் ரிஷாத் பதியுதீன் கூறினார்.

# சீனாவுக்கு வரையறையற்ற முன்னுரிமை வழங்கியமையால் அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பாவிற்கு பகையாகி விட்டோம்!

## எதிர்க்கட்சி சாடல்

கொழும்பு, மார்ச். 11

அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சீனாவுக்கு வரையறையற்ற முன்னுரிமை வழங்கியமையால் அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அழுத்தங்களை எதிர்க்கொள்ள நேரிட்டது. சர்வதேச நாடுகளுடனான உறவுகளைக் கூட அரசாங்கம் தனது அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜ கருண தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை விவகாரத்தை அரசாங்கம் குறுகிய அரசியல் தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்கிறது. இராணுவத்தினரை மின்சார கதிரைக்கு கொண்டு செல்லும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் விவகாரம் காணப்படுகிறது என்று ஆளும் தரப்பினர் குறிப்பிட்டார்கள். இவர்களின் தவறான தேர்தல் பிரசாரங்களால் இலங்கை சர்வதேச மட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை குறித்து காணப்பட்ட நெருக்கடி நிலைமைக்கு பேச்சு ஊடாகத் தீர்வு காணப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் இராணுவத்தினரை சர்வதேசத்தில் காட்டிக் கொடுத்ததாகக் குறிப்பிடப்படும் செய்தி முற்றிலும் தவறானதாகும். நாட்டின் இறையாண்மையையும், சுயாதீனத்தன்மையும் அரசாங்கம் ஒருபோதும் விட்டுக் கொடுக்கவில்லை.

தற்போதைய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையை அணுகும் விதம் முற்றிலும் தவறானது. வெறுக்கத் தக்க பேச்சுக்களினால் தேசிய நல்லிணக்கம் பாதிக்கப்பட்டுள்ளது. உள்ளக மட்டத்தில் காணப்படும் தவறுகளைத் திருத்திக் கொள்ளாமல் சர்வதேச அரங்கில் வீரவசனம் பேசுவது பயனற்றது. அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் பல நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சீனாவுக்கு வரையறையற்ற முன்னுரிமை வழங்கப்பட்டது. இதன் காரணமாக அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அழுத்தங்கள் இலங்கை மீது செலுத்தப்பட்டன. தற்போதும் இந்நிலைமையே காணப்படுகிறது. கொழும்பு துறை முகத்தின் கிழக்கு மற்றும் மேற்கு முனைய விவகாரத்தில் அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை இந்தியா பகிரங்கப்படுத்தியுள்ளது. இராஜதந்திர மட்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காண எதிர்க்கட்சியினர் என்ற ரீதியில் ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார்.

# சுருட்டுப்பத்திய வயோதிபர் தீயில் எரிந்து பரிதாபச் சாவு

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் தீயில் எரிந்து காயமடைந்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இறந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது -

கடந்த 6ஆம் திகதி குறித்த வயோதிபர் சுருட்டுப் பத்தியுள்ளார். இதன்போது தவறுதலாக அவரது சாரத்தில் தீப்பற்றியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த அவர் மீட்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் அங்கு இறந்துள்ளார்.

சம்பவத்தில் சங்கரப்பிள்ளை வேதாரணியம் (வயது 79) என்ற வயோதிபரே இறந்துள்ளார். அவர் சிலகாலங்களாக மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.






# 'ரேவதா' யானை உயிரிழந்தது!



கலா வாவிற்கும் பலலுவாவிற்கும் இடையிலான பள்ளத்தாக்கில் சுதந்திரமாக சுற்றித் திரிந்த 'ரேவதா' என்ற கம்பீரமான யானை கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்த நிலையில் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் சேனைப் பயிர்செய்கையை பாதுகாப்பதற்காக முறையற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கிய பின்னர் அந்த யானை உயிரிழந்துள்ளதாக வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந் நிலையில் இந்த அப்பாவி யானையின் தீடீர் மரணம் தொடர்பாக அதிகாரிகள் பக்கச் சார்பற்ற விசாரணையை மேற்கொண்டு குற்றவாளிகளை கடுமையாகத் தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

43 வயதான ரேவதா யானை மன்னார் மந்தையின் மிகப்பெரிய யானை, இது கலா வாவியின் அழகை மேலும் அதிகரித்தது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.03.2021 இல் வெளியிடப்பெற்றது.

# சாதாரண தரப் பெறுபேறு ஜூனில் வெளிவரும்!



## கல்வி அமைச்சு அறிவிப்பு

நேற்றுடன் நிறைவடைந்த 2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தாராதர சாதாரண தரப் பரீட்சை பெபேறுகள் எதிர்வரும் ஜூன் மாதம் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெறவிருந்த 2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை, மார்ச் முதலாம் திகதி முதல் பத்தாம் திகதி வரை நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்திருந்தது.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நடத்தப்பட்ட க.பொ.த. சாதாரணத்தரப் பரீட்சைக்கு 6 லட்சத்து 22 ஆயிரம் பேர் தோற்றியிருந்தனர். பரீட்சைக்கு தோற்றியவர்களில் 56 பேர் கொரோனாத் தொற்றுக் காரணமாக, 40 விசேட மத்திய நிலையங்களில் பரீட்சை எழுதியிருந்தமையுடன் தனிமைப்படுத்தப்பட்ட 322 பேர் பரீட்சை மத்திய நிலையத்தில் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வகுப்புக்களில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

க.பொ.த. சாதாரணத்தர பரீட்சையின் பரீட்சை முடிவுகள் எதிர்வரும் ஜூன் மாதத்தில் வெளியிடப்படும் என தெரிவித்த கல்வி அமைச்சர், க.பொ.த. உயர் தரப் பிரிவுக்குத் தகுதிபெறும் மாணவர்கள் எதிர்வரும் ஜூலை மாதத்தில் சேர்க்கப்படுவார்கள். அதற்குரிய நடவடிக்கைகளை மிகவும் விரைவாக எமது அமைச்சு எடுக்கும். – என்றார்.

# போலி நாணயத் தாள்கள் வழங்கி பொருள் வாங்கியவர்கள் கைது!

அத்தியாவசிய பொருள் விற்பனை நிலையமொன்றில் பொருள்களைக் கொள்வனவு செய்து 5, ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளை வழங்கிய இரு சந்தேகநபர்கள் களனி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

அண்மையில் போலி நாணயத்தாள்களை உபயோகித்தல் மற்றும் அச்சிடுதல் உள்ளிட்ட குற்றச் செயல்கள் பல பதிவாகியுள்ளன.

இவ்வாறு 5 ஆயிரம் ரூபா மற்றும் 1,000 ரூபா போலி நாணயத்தாள்கள் அதிகளவில் அச்சிடப்படுகின்றன எனத் தெரிய வந்துள்ளது.

எனவே நேரடி பண பரிமாற்றத்தின்போது மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

உண்மையான நாணயத் தாள் எனக் கண்டறிவதற்கான அனைத்து அடையாளங்களையும் பரிசோதித்து பிரிதொருவரிடமிருந்து அவற்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக விற்பனை நிலையங்கள் மற்றும் சந்தை உரிமையாளர்கள் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படவேண்டும்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் குற்ற விசாரணைப் பிரிவினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# புலஸ்தினி உட்பட 05 பேரை ஆணைக்குழுவில் விசாரிக்க அறிவுறுத்தல்!

ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் 17 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 05 பேர் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு சட்டமா அதிபர் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அபு ஹிந்த், அஹமட் தாலிப் லுக்மான் தாலிப், அபு அப்துல்லா, ரிம்ஜான் மற்றும் புலஸ்தினி மகேந்திரன் என்று அழைக்கப்படும் சாரா ஜஸ்மின் ஆகியோர் தொடர்பாகவே விசாரணையை முன்னெடுக்க அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 2019 ஏப்ரல் தாக்குதல்களுக்கு பொறுப்பான அனைவரையும் சட்டத்தின் முன் கொண்டுவருவதில் உறுதியாக இருப்பதாகக் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா குறிப்பிட்டார்.

இதேவேளை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட சாட்சிய பதிவுகளை ஆய்வு செய்ய 12 பேர்கொண்ட குழுவையும் சட்டமா அதிபர் நியமித்துள்ளார். தாக்குதல் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அனைத்து பதிவுகளும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழங்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஓல்டன் தோட்ட தொழிலாளர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்!

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சாமிமலை – ஓல்டன் தோட்டத் தொழிலாளர்களை, நேற்று (புதன் கிழமை) பிணையில் செல்வதற்கு ஹற்றன் மாவட்ட நீதிமன்றத்தின் நீதிவான் அனுமதி வழங்கினார்.

ஓல்டன் தோட்ட முகாமைத்துவத்துக்கும் தொழிலாளர்களுக்குமிடையில் ஏற்பட்ட முறுகலையடுத்து, 8 தொழிலாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

முகாமையாளர்களை தாக்கியமை உட்பட தொழிலாளர்களுக்கு எதிராக 9 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

முகாமைத்துவத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் பிணை வழங்க எதிர்ப்பு தெரிவித்தனர். இதனையடுத்து மார்ச் 3 ஆம் திகதி வரை 8 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். முதலாம் திகதி ஏனைய இரு தொழிலாளர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் இன்று மேற்படி வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பிணை வழங்கக்கூடாது என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

எனினும், தொழிலாளர்களின் போராட்டத்தை மழுங்கடிப்பதற்காகவே இவ்வாறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவர்களை பயங்கரவாதிகளாக காட்டுவதற்கு முயற்சிக்கின்றனர் என தாம் வாதங்களை முன்வைத்ததாக தொழிலாளர்கள் சார்பில் ஆஜரான



சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த பின்னர், ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 10 தொழிலாளர்களையும் இன்று ஆஜரான 12பேரும் நிபந்தனை அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த வழக்கு, எதிர்வரும் ஏப்ரல் 28 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை தம்மை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுத்த அனைவருக்கும், தொழிலாளர்கள் நன்றி தெரிவித்தனர்.

அத்துடன், விடுதலையாகும் நாளில் ஆயிரம் ரூபா பற்றிய அறிவிப்பு வெளிவந்ததையிட்டு மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினர்.

# சிவராத்திரி வழிபாடுகளில் 50 பேருக்கு மட்டும் அனுமதி

(எஸ்.நிதர்ஷன்)

இன்று வருடாந்த சிவராத்திரி நாள் வழிபாடுகள் நடைபெறவுள்ளன. ஆனால், கடந்த வாரத்திலிருந்து யாழ். மாவட்டத்தில் கொரோனாப் பரவல் தீவிரமடைந்து வருகின்றது. அதனால் பக்தர்கள் மற்றும் பொதுமக்களை அவதானமாக நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

– இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

கோயில்களில் நடைபெறவுள்ள சிவராத்திரி வழிபாடுகளில் ஆகக் கூடியதாக 50 பேரை மட்டும் அனுமதிக்குமாறும் ஏனையோர் தத்தம் வீடுகளில் தங்கி நின்று எங் கும் நிறைந்துள்ள இறைவனை மனதிலிருத்தி வழிபாடுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

சிவராத்திரி நாளுடன் இணைந்து கோயில்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலாசார நிகழ்வுகளை இரத்துச் செய்து தனியே சமயாசார கிரியை நிகழ்வுகளை மட்டும் நடத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் மேற்கூறிய கட்டுப்பாட்டுகளுடன் நடைபெறவுள்ள இவ்வருட சிவராத்திரி வழிபாடுகளில் கொரோனாத் தொற்றுத் தடுப்புக்கான சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப் பிடிக்குமாறும் அவற்றைக் கண்காணிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது இந்த வேண்டுகோளுக்கு இந்து மதகுருமார்கள், இந்து மதத் தலைவர் கள், கோயில் அறங்காவலர் சபையினர், பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரைப் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம் – என்றுள்ளது.

# குழுமோதலினால் குடும்பஸ்தர் சாவு!

## புத்தளத்தில் சம்பவம்

புத்தளம் கடையாக்குளம் பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9.30 மணியளவில் இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் கூரிய ஆயுதம் ஒன்றால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என புத்தள பொலிஸ் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

புத்தளம் முள்ளிபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

புறா வளர்ப்பில் ஏற்பட்ட பழைய பிரச்சினையே கொலையில் முடிவடைந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்தில் உயிரிழந்த நபர், சம்பவம் இடம்பெற்ற செவ்வாய்க்கிழமை இரவு கடையாக்குளம் பிரதேசத்தில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு வருகை தந்த போது, அங்கு வந்த சிலர் புறா வளர்ப்பில் ஏற்பட்ட பழைய பிரச்சினைகளை முன்வைத்து குறித்த நபருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு குழு மோதல் ஏற்பட்டதுடன், மூன்று பிள்ளைகளின் தந்தையான குறித்த நபரை கூரிய ஆயுதத்தால் தாக்கிய சந்தேக நபர்கள் மேலும் இருவரை காயப்படுத்தியுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், காயமடைந்த இருவர் சிகிச்சைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும், புத்தளம் தலைமையகப் பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

